இலங்கை வயம்ப பல்கலைக்கழகத்தின் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக்கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள், ஏனைய விளக்கத் தகவல்கள் என்பவற்றின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2011 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 107(5) ஆம் உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசிலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.



අංක 306/72 පොල්දුව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව
இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை இலங்கை
No.306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka

දුරකථනය / தொலைபேசி / Telephone: 2887028 -34
ෆැක්ස් අංකය / பக்ஸ் இல / Fax No.: 2887223
ඉලෙක්ට්‍රොනික් තැපැල් / ஈ- மெயில் / E-mail: oaggov@sltnet.lk

1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் பல்கலைக்கழகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி பல்கலைக்கழகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள்

கணக்காய்வின் நோக்கெல்லையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிவு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றது.

எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

## 2. நிதிக் கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களைத் தவிர்த்து 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இலங்கை வயம்ப பல்கலைக்கழகத்தின் நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கைக் கணக்கீட்டு நியமம்

இலங்கை கணக்கீட்டு நியமம் 18 இன் பிரகாரம் ரூபா 15,847,454 பெறுமதியுள்ள ஐந்தொகைப் பெறுமதி பூச்சியமாகக் காண்பிக்கப்பட்டிருந்த 07 சொத்து விடயங்கள் பல்கலைக்கழகத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படுகின்ற சொத்துக்கள் மீள் கணிப்பீடு செய்யப்பட்டு கணக்குகளுக்குக் கொண்டுவருவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

பின்வரும் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) வட்டி வருமானம் காசு அடிப்படையில் கணக்கு வைக்கப்பட வேண்டியிருந்த போதிலும் பல்கலைக்கழகத்திற்கு பல்வேறு நிதியங்களிலிருந்து கிடைக்கப்பெற்ற ரூபா 1,457,411 தொகையான வட்டி நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிதிக்கூற்றில் 2.4 இல் நடாத்தப்பட்ட ஆனால் கொள்கையின் பிரகாரம் இருப்புக்களை விநியோகித்தல் முதல் வந்தது முதல் விநியோகிக்கப்பட வேண்டியிருந்த போதும் அதற்குப் புறம்பான சில சந்தர்ப்பங்களிலும், 2.5 இல் குறிப்பிடப்பட்ட கொள்கையின் பிரகாரம் பூர்த்தியடையாத ஒப்பந்த வேலைகள் காசு அடிப்படையில் கணக்கு வைப்பதற்குப் பதிலாக அட்டுறு அடிப்படையில் கணக்கு வைக்கப்பட்ட இரண்டு சந்தர்ப்பங்களும் அவதானிக்கப்பட்டன.

### 2.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் போது ஊழியர் அபிவிருத்திச் செயற்பாடுகளுக்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட ரூபா 4,500,000 தொகை மற்றும் ஆராய்ச்சி செயற்பாடுகளுக்காக சர்வதேச சங்கம் மற்றும் உயர் கல்வி அமைச்சிடமிருந்து வழங்கப்பட்ட ரூபா 967,750 தொகையான மானியங்கள் என்பன ஆண்டின் வருமானமாக கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்பட்ட ஆனால் பூர்த்தி செய்யப்பட்ட பல்வேறு கற்கை நெறிகளின் இலாபத்தில் 10% உபவேந்தரின் நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டியிருந்தமை உரிய மதிப்பீடு மற்றும் பட்டோலைகளில் காண்பிக்கப்பட்டிருந்தும் 02 பாடநெறிகளுக்கு அதன் 04 கட்டங்களில் ரூபா 352,620 தொகை செலவு வைக்கப்பட்டிராததுடன் மேலும் 04 பாடநெறிகள் தொடர்பாக 10 கட்டங்களில் செலவு வைக்கப்பட வேண்டிய தொகை காண்பிக்கப்பட்டிருக்க வில்லை.

(இ) பட்டப் பின்படிப்பு பாடநெறிகளுக்காக பராமரிக்கப்படுகின்ற குளியாப்பட்டிய இலங்கை வங்கி நடைமுறைக் கணக்கில் 2011 ஆம் ஆண்டின் சனவரி தொடக்கம் திசெம்பர் வரை இனங்காணப்படாத வைப்பாகக் காணப்பட்ட ரூபா 435,750 தொகை இனங்காணப்பட்டு கணக்குகளுக்கு கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.4 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 1999 ஆம் ஆண்டு தொடக்கம் கொண்டுவரப்படுகின்ற ரூபா 121,342 பெறுமதியான 15 கடன்பட்டோர் மீதிகள் மீளாய்வாண்டின் போதும் தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பல வருடங்களாக காணப்பட்டுவரும் சம்பள முற்பண மீதியில் உள்ளடக்கப்பட்டிருக்கின்ற 2010 திசெம்பர் 31 வரை தீர்க்கப்படாதிருந்த சம்பள முற்பண மீதிகள் ரூபா 50,300 ஆக இருந்தது.

(இ) 2007 ஆம் ஆண்டு தொடக்கம் 2010 திசெம்பர் 31 ஆந் திகதி வரை 05 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்ட ஒப்பந்த முற்பணம் ரூபா 5,550,981 தொகையும், 1996 ஆம் ஆண்டிலிருந்து 2010 திசெம்பர் 31 ஆந் திகதி வரை வழங்கல் முற்பணமாக 31 சந்தர்ப்பங்களின் போது வழங்கப்பட்ட ரூபா 1,142,790 தொகை மற்றும் 2003 ஆம் ஆண்டு தொடக்கம் 2010 திசெம்பர் 31 ஆந் திகதி வரை 21 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்ட ரூபா 203,530 தொகையான சேவை முற்பணம் என்பவற்றை 2012 மார்ச் 31 ஆந் திகதி வரையிலும் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

ரூபா 121,054,602 பெறுமதியான காணிகளுக்குரிய பயன்படுத்துவதற்கான உரித்துறுதி, ரூபா 737,866,826 பெறுமதியான 04 நிலையான சொத்துக்களுக்குரிய பட்டோலைகள் மற்றும் நிலையான சொத்துப் பதிவேடுகள் மற்றும் ரூபா 6,607,263 பெறுமதியான நீர் வழங்கல் திட்டம் ஆகிய சொத்துக்களுக்குரிய பட்டோலைகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

2.2.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்வற்றுடனான இணங்காமைகள்

பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
| --- | --- |
| (அ) அதிகாரச் சட்டம் | |
| 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் XIII ஆம் அத்தியாயத்தின் 99(ஈ) பிரிவு | எத்தோற்றுவாய் மூலங்களிலிருந்தேனும் உழைக்கப்படுகின்ற சகல வருமானங்களும் பல்கலைக்கழக நிதியத்திற்குச் செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும் அந் நியதிகளுக்கு முரணாக 04 பாடநெறிகள் மற்றும் 6 செயற்திட்டங்களின் கீழ் பெறப்பட்ட ரூபா 19,127,924 தொகையானது பல்கலைக்கழக நிதியத்திற்குச் செலவு வைக்கப்பட்டிராததுதுடன் அவைகள் நிதிக்கூற்றுக்களில் ஏனைய பொறுப்புக்களின் கீழ் கணக்கு வைக்கப்பட்டிருந்தன. |
| (ஆ) பல்கலைக்கழக தாபன விதிக்கோவை | |
| XXVII ஆம் அத்தியாயத்தின் 2.1.1 ஆம் பிரிவு | பல்கலைக்கழகத்திற்குச் சொந்தமான சகல வாகனங்களும் பதிவாளரின் பெயரில் பதிவு செய்யப்பட வேண்டிய போதிலும் வயம்ப பல்கலைக்கழகத்தின் 06 வாகனங்கள் அவ்வாறு பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. |

(இ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை

| | |
|---|---|
| XIX ஆம் அத்தியாயத்தின் 5.5 ஆம் பிரிவு | பல்கலைக்கழகத்திற்குச் சொந்தமான உத்தியோகபூர்வ இல்லங்கள் மற்றும் வாடகை அடிப்படையில் பெறப்பட்ட வீடுகளில் வசித்து வருகின்ற உத்தியோகத்தர்களிடமிருந்து தாபனவிதிக் கோவையின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் வாடகை அறவிடுவதற்குப் பதிலாக பல்கலைக்கழகத்தின் பதவியணியினர்களின் வதிவிடக் குழுவினால் தீர்மானிக்கப்பட்ட முறைமையில் வாடகை கணிப்பீடு செய்யப்பட்டு அறவிடப்பட்ட காரணத்தினால் மீளாய்வாண்டிற்காக தாபன விதிக்கோவையின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் அறவிடவேண்டிய வாடகையினை விட ரூபா 714,446 தொகையான வீட்டு வாடகை குறைத்து அறவிடப்பட்டிருந்தன. |

(ஈ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம்

| | |
|---|---|
| (i) நி.பி 371(2)(ஆ) பிரிவு | உப கட்டுநிதியாக ஒரு சந்தர்ப்பத்தில் வழங்கக் கூடிய ஆகக் கூடிய தொகை ரூபா 20,000 ஆக இருந்த போதிலும் அந்த எல்லையினை விஞ்சி 05 சந்தர்ப்பங்களின் போது ரூபா 173,300 தொகை முற்பணமாக வழங்கப்பட்டிருந்தன. |

| | | |
|---|---|---|
| (ii) | நி.பி 396(இ) | வழங்கப்பட்ட திகதியிலிருந்து 06 மாதங்களை விஞ்சியிருந்த ரூபா 57,800 பெறுமதியான 28 காசோலைகள் தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | நி.பி 571(2) பிரிவு | வைப்புச் செய்யப்பட்ட திகதியிலிருந்து இரண்டு வருடங்களை விஞ்சியிருந்த ரூபா 3,897,713 பெறுமதியான நானாவித வைப்புக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iv) | நி.பி 835(1) | கட்டிடத்தை வாடகைக்கு பெற்றுக் கொள்ளுதல் தொடர்பாக உரிய அமைச்சுச் செயலாளரின் அங்கீகாரம் பெறப்பட வேண்டிய போதிலும் அதற்கான அங்கீகாரம் பெறப்படாமல் கட்டிடம் வாடகைக்கு பெறப்பட்டு அதற்காக வாடகைப் பணமாக மீளாய்வாண்டின் போது ரூபா 93,869,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது. தற்போது உரிய அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவருக்கும் உயர் கல்வி அமைச்சின் செயலாளருக்கும் அனுப்பப்பட்டிருப்பதாக உபவேந்தரின் பதிலில் தெரிவிக்கப்பட்டிருந்தது. |

(உ) பொதுநிருவாகச் சுற்றறிக்கை

| | |
|---|---|
| 11/2006 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றுநிருபம் | மீளாய்வாண்டின் போது உபவேந்தருக்கு உரித்தான எரிபொருள் எல்லையினை விஞ்சி ரூபா 91,244 பெறுமதியான மேலதிக எரிபொருள் வழங்கப்பட்டிருந்ததுடன் இதற்காக 2012 ஆகஸ்ட் 23 ஆந் திகதி கட்டுப்பாட்டுச் சபையின் அங்கீகாரம் பெறப்பட்டிருந்தது. |

## 2.2.7 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

2011 ஆம் ஆண்டிற்கான பல்கலைக்கழகத்திற்கு பாதுகாப்பு சேவையைப் பெற்றுக் கொள்வதற்காக தனியார் நிறுவனமொன்றுடன் 2011 யூன் 01 தொடக்கம் 2012 சனவரி 31 வரையான காலத்திற்கு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு அந்த உடன்படிக்கையின் செல்லுபடிக் காலம் இன்னும் காணப்பட்டிருந்தும் உயர் கல்வி அமைச்சுச் செயலாளரின் 2011 செப்தெம்பர் 22 ஆந் திகதிய எச்ஈ/ஏடீ/ பாதுகாப்பு ஆம் இலக்க கடிதத்தின் அறிவுரைகளின் படி நடவடிக்கை எடுக்கப்பட்டு வேறு ஒப்பந்தகாரரிடமிருந்து பாதுகாப்பு சேவை பெறப்பட்டமையின் காரணமாக 2½ மாத காலத்தில் பல்கலைக்கழக நிதியத்திற்கு ரூபா 4,768,340 தொகையான நட்டமொன்று ஏற்பட்டிருந்தது.

## 03. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2011 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான பல்கலைக்கழக நடவடிக்கைகளினது நிதிசார் விளைவுகள் மீண்டுவருஞ் செலவினத்திற்கான அரசாங்க மானியத்தைக் கணக்கிலெடுப்பதற்கு முன்னனர் ரூபா 506,817,000 பற்றாக்குறையாக இருந்ததுடன் இதற்கொப்பான முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 419,030,000 ஆகும். பல்கலைக்கழகத்தின் மீண்டுவருஞ் செலவினத்திற்காக அரசாங்கத்திடம் இருந்து பெற்ற ரூபா. 406,284,000 மானியத்தைக் கணக்கிலிலெடுத்ததன் பின்னர் மீளாய்வாண்டிற்கான பற்றாக்குறை ரூபா 100,533,000 வரை குறைவடைந்திருந்ததுடன் இதற்கொப்பாக முன்னைய ஆண்டில் மீண்டுவருஞ்

செலவினத்திற்காக அரசாங்கத்திடமிருந்து பெற்ற ரூபா. 327,535,000 மானியத்தை சீராக்கல் செய்ததன் பின்னர் அந்த ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா. 91,495,000 வரை குறைவடைந்திருந்தது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 9,038,000 வீழ்ச்சி ஏற்பட்டிருந்தது.

நிதி விளைவுகளின் இந்த வீழ்ச்சிக்கு ஆராய்ச்சிப் படிகள் ரூபா 11,250,000 இனால் அதிகரித்தமை, ஏனைய படிகள் ரூபா 5,833,000 இனால் அதிகரித்தமை மற்றும் பணிக்கொடை கொடுப்பனவுகள் ரூபா 8,833,000 இனால் அதிகரித்தமை என்பன பிரதானமாகத் தாக்மளித்திருந்தன.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

2011 ஆம் ஆண்டின் ஒவ்வொரு பீடங்களுக்காக ஏற்பட்டிருந்த செலவினம், மாணவர் எண்ணிக்கை மற்றும் ஒரு மாணவருக்குரிய கிரயம் தொடர்பான தகவல்கள் என்பன கீழே காண்பிக்கப்படுகின்றன.

| விபரம் | வியாபாரக் கல்வி மற்றும் நிதிசார் பீடம் | பிரயோக விஞ்ஞான பீடம் | விவசாய மற்றும் பெருந்தோட்ட முகாமைத்துவ பீடம் | கால்நடை கடற்றொழில் போஷனைப் பீடம் |
|---|---|---|---|---|
| 2011 ஆம் ஆண்டின் செலவினம் ரூபா | 44,648,076 | 50,288,773 | 59,222,043 | 59,739,834 |
| மாணவர் எண்ணிக்கை | 1,079 | 358 | 396 | 323 |
| ஒரு மாணவருக்கான கிரயம் ரூபா | 41,379 | 140,471 | 149,550 | 184,953 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2011 ஆம் ஆண்டில் விலங்கின கடற்றொழில் போஷனைப் பீடம் மற்றும் பிரயோக விஞ்ஞான பீடம் என்பவற்றில் ஒரு மாணவருக்கான கிரயம் ஏனைய பீடங்களுடன் ஒப்பிடுகின்ற போது உயர்ந்த பெறுமதியைக் கொண்டிருந்தது.

(ஆ) பல்கலைக்கழகத்தின் மூன்று பீடங்களுக்காக தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கையில் கருத்திற் கொள்ளக்கூடிய எண்ணிக்கை ஏனைய பல்கலைக்கழகங்களுக்கு மாற்றப்பட்டிருந்தன. இது முன்னைய வருடத்துடன் ஒப்பிடுகின்ற போது உயர் சதவீதமாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. இது தொடர்பான விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | வயம்ப பல்கலைக் கழகத்தில் பதிவு செய்யப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை | ஏனைய பல்கலைக் கழகங்களுக்கு மாற்றம் பெற்றுச் சென்ற மாணவர்களின் எண்ணிக்கை | ஏனைய பல்கலைக் கழகங்களுக்கு மாற்றம் பெற்றுச் சென்ற எண்ணிக்கை பதிவு செய்யப்பட்ட எண்ணிக்கையின் சதவீதமாக |
|---|---|---|---|---|
| | | | | % |
| (i) | வியாபாரக் கல்வி மற்றும் நிதிசார் பீடம் | 344 | 17 | 5 |
| (ii) | பிரயோக விஞ்ஞான பீடம் | 146 | 98 | 67 |
| (iii) | விவசாய மற்றும் பெருந்தோட்ட முகாமைத்துவ பீடம் | 115 | 45 | 39 |
| (iv) | கால்நடை கடற்றொழில் மற்றும் போஷனைப் பீடம் | 110 | 45 | 41 |

**4.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) வயம்ப பல்கலைக்கழகத்தில் சேவையில் ஈடுபட்டுள்ள 08 விரிவுரையாளர்கள் வெளிநாடு சென்ற போது பல்கலைக்கழகத்துடன் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் குறிப்பிட்ட திகதியில் திரும்ப சேவைக்கு அறிக்கையிடாமையின் காரணமாக உடன்படிக்கையினை மீறியிருந்ததுடன் அதன் பிரகாரம் அவர்களிடமிருந்து பல்கலைக்கழகத்திற்கு அறவிட வேண்டியிருந்த பணத்தில் நிலுவைத் தொகையான ரூபா 10,524,210 இனை அறவீடு செய்தவற்கு முறையான வழிமுறைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2008 ஆம் ஆண்டில் கொள்வனவு நடைமுறைகளுக்குப் புறம்பாக தனியார் நிறுவனமொன்றிலிருந்து ரூபா 4,130,770 பெறுமதியான நூலகப் புத்தகங்கள் கடனுக்குப் பெறப்பட்டிருந்ததுடன் நிதிக் கூற்றுக்களில் அப் பொறுப்பு வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 4.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

பல்கலைக்கழகத்தின் சுத்திகரிப்பு செயற்பாடுகளுக்குரிய ஒப்பந்தங்களை வழங்குவதற்கான உடன்படிக்கையின் பிரகாரம் தினந்தோறும் சேவையில் ஈடுபடுத்த வேண்டிய ஊழியர் எண்ணிக்கை 42 ஆக இருந்த போதிலும் ஈடுபடுத்தப்பட்ட ஊழியர் எண்ணிக்கை குறைந்ததன் காரமாண 2011 நவம்பர் மாதம் 22 வேலை நாட்களுக்குள் வேலை செய்ய வேண்டிய 307 மனித நாட்கள் குறைவாக வேலை செய்யப்பட்டிருந்ததும் உடன்படிக்கையின் பிரகாரம் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

## 4.4 நிதியத்தின் குறைவான பயன்பாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) தகவல் தொழில்நுட்ப நிதியத்திற்காக 2010 ஆம் ஆண்டின் போது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிடமிருந்து கிடைத்திருந்த ரூபா 1,000,000 தொகை 2011 ஆம் ஆண்டின் போதும் எவ்வித செயற்பாடுகளிலும் ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2000 ஆம் ஆண்டு தொடக்கம் 2010 வரை மஹபொல நிதியம் மற்றும் மாணவர் உதவித்தொகை நிதியம் என்பவற்றில் செலுத்தப்படாத எஞ்சிய தொகை முறையே ரூபா 633,200 மற்றும் ரூபா 560,400 ஆக இருந்ததுடன் அத் தொகைகளில் 2011 சனவரி 01 ஆந் திகதியில் உள்ளவாறான மீதியான ரூபா 1,193,600 தொகை மேற்கூறப்பட்ட நிதியங்களுக்கு செலவு வைக்கப்படாமல் மாணவர் நலன்புரி நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டு பல வருடகாலமாக செயற்பாடற்றிருந்த அத்தொகை 2011 திசெம்பர் 31 ஆந் திகதி பல்கலைக்கழக நிதியத்திற்கு எடுக்கப்பட்டிருந்தன.

4.5 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

குளியாப்பிட்டிய சுற்றாடலில் 03 மாணவர் விடுதிகளை வாடகைக்குப் பெறப்படுகின்ற போது கட்டுபாட்டுச் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் மதிப்பீட்டுப் பெறுமதியை விஞ்சி ரூபா 421,000 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

4.6 இனங்காணப்பட்ட நட்டம்

இயற்கை உயிரியல் தொழில்நுட்பம் (Nature Biotechnology) என்ற பெயருடைய சஞ்சிகையின் கொள்வனவுக்காக 2003 - 2011 வரையான ஆண்டு காலப்பகுதியில் செலுத்தப்பட்ட ரூபா 1,803,968 தொகையான முற்பணங்களில் ரூபா 631,413 பெறுமதியான சஞ்சிகைகளும், 2007 ஆம் ஆண்டின் போது வெளிநாட்டு தனியார் நிறுவனமொன்றிலிருந்து சஞ்சிகைகளைக் கொள்வனவு செய்வதற்காக செலுத்தப்பட்ட ரூபா 363,152 தொகையான முற்பணங்களில் ரூபா 135,690 பெறுமதியான சஞ்சிகைகளும் 2012 மார்ச் 31 ஆந் திகதி வரையிலும் நூலகத்திற்குக் கிடைத்திருக்கவில்லை.

4.7 ஒப்பந்த நிருவாகத்தில் குறைபாடு

பின்வரும் .விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டன.

(அ) கால்நடை கடற்றொழில் போஷனைப் பீடத்தின் வாகனத் தரிப்பிட நிர்மாண ஒப்பந்தத்தின் ஆகக் குறைந்த கேள்வி பொறியியலாளர் மதிப்பீட்டுப் பெறுமதியான ரூபா 857,525 இனை விட 5.28% ஆல் அதிகரித்திருந்த போதிலும் அதில் உள்ளடக்கப்பட்ட ரூபா 37,000 தொகையான வேலைப்பகுதி மேற்கொள்ளப்பட்டிராததுடன் ரூபா 138,796 தொகையான மேலதிக வேலை மற்றும் மேலதிகமாகச் செய்யப்பட்ட வேலைப் பெறுமதிகளுக்கும் முறையான அங்கீகாரமின்றி ரூபா 993,087 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) நிருவாகக் கட்டிடத்தை அலுமினியத்தினால் பகுதிகளாகப் பிரிக்கும் ஒப்பந்தத்தின் ஆகக்குறைந்த கேள்வியான ரூபா 413,175 தொகையில் ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்ததுடன் அது மேற்கொள்ளப்படாத காரணத்தினால் இரண்டாவது ஆகக் குறைந்த கேள்விக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்ததுடன் முதலாவது ஒப்பந்தகாரரிடமிருந்து செயலாற்றல் காப்பாக அறவிட வேண்டியிருந்த ரூபா 41,317 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டின் போது மதிப்பீடு தயாரிக்கப்படாமல் ரூபா 1,756,147 தொகையான நேர்க்கூலி அடிப்படையில் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. மதிப்பீடு தயாரிக்கும் போது காலம் வீணாகின்றமையினால் மதிப்பீடு தயாரிக்கப்படாமல் நிர்மாணங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தாக உபவேந்தர் அறிவித்திருந்தார்.

(ஈ) பரீட்சிக்கப்பட்ட 05 செயற்திட்டங்களில் ஒப்பந்தப் பெறுமதியில் 14% - 27% வரையான அளவில் வேலைப் பகுதி கைவிடப்பட்டிருந்ததுடன் மேலதிக வேலை மற்றும் மாற்றங்கள் 15% - 26% வரையான அளவில் இருந்தது. இதற்காக முறையான அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

(உ) பல்கலைக்கழகத்தின் அங்கீகாரம் பிரதான கட்டிட வரைபடத்திட்டத்தில் உள்ளடக்கப்படாத ரூபா 2,025,962 பெறுமதியான பல்வேறு நிர்மாணங்கள் மீளாய்வாண்டின் போது கட்டுப்பாட்டுச் சபையின் அங்கீகாரமின்றி மேற்கொள்ளப்பட்டிருந்தன.

## 4.8 பதவியணியினர் நிருவாகம்

### 4.8.1 அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவியணியினர்

2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு வயம்ப பல்கலைக்கழகத்தின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான தகவல் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | அங்கீகரிக்கப்பட்ட | | உள்ளவாறான | | வெற்றிடம் / (மிகை) | |
|---|---|---|---|---|---|---|
| | கல்விசார் | கல்விசாரா | கல்விசார் | கல்விசாரா | கல்விசார் | கல்விசாரா |
| பதவிநிலை | 162 | 31 | 118 | 25 | 44 | 06 |
| இரண்டாம் நிலை | 83 | 152 | 88 | 141 | (05) | 11 |
| ஆரம்ப நிலை | - | 138 | - | 119 | - | 19 |
| ஏனைய | - | - | 13 | 29 | 13 | (29) |
| | 245 | 321 | 219 | 314 | 52 | 07 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மாணவர்களின் கல்வியில் நேரடியான தாக்கத்தினைச் செலுத்தும் கல்விசார் பதவியணியில் பேரசிரியர்கள், கலாநிதிகள், விரிவுரையாளர்கள் மற்றும் விரிவுரை (தகுதிகாண்) போன்ற தொகுதிகளில் 44 வெற்றிடங்கள் காணப்பட்டன.

(ஆ) கல்விசார் பிரிவில் தற்காலிக பயிற்றுவிப்பாளர்கள் மற்றும் போதனாசியர்களின் அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கையான 58 இனை விஞ்சி 22 பேர் சேர்க்கப்பட்டிருந்தனர்.

(இ) 2011 ஆம் ஆண்டின் போது 13 வெளி விரிவுரையாளர்கள் சேர்க்கப்பட்டிருந்ததுடன் அதற்காக ரூபா 1,202,715 தொகை சம்பளமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஈ) அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கையில் 19 தொழிலாளர்களின் வெற்றிடங்கள் காணப்பட்ட போதும் அதற்கான ஆட்சேர்த்தல்களின்றி வெளி ஊழியர் சேவை வழங்கும் நிறுவனத்திடமிருந்து 29 தொழிலாளர்கள் சேர்க்கப்பட்டு ரூபா 4,766,716 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

## 5. கணக்களிதன்மையும் சிறந்த கட்டுப்பாடும்

### 5.1 கூட்டிணைந்த திட்டம்

பல்கலைக்கழகத்தினால் மீளாய்வாண்டினை உள்ளடக்கும் வகையில் கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.2 செயல் நடவடிக்கைத் திட்டம்

செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் ரூபா 28,189,988 நிதி ஏற்பாடுகளிலிருந்து நிர்மாணிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த கட்டிடம் மற்றும் ரூபா 12,459,101 தொகையான ஏற்பாட்டில் கொள்வனவு செய்தவற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த நூலகப் புத்தகங்கள் என்பவைகளில் மீளாய்வாண்டின் போது முறையே ரூபா 27,079,735 மற்றும் ரூபா 9,186,780 தொகைகள் செலவு செய்யப்பட்டிருந்ததுடன் 2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு முறையே அந்த செலவின விடயங்கள் இரண்டில் சேமிப்பு ரூபா 1,110,252 மற்றும் ரூபா 3,272,321 ஆக இருந்தது.

5.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

பல்கலைக்கழகத்தினால் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு என்பன உருவாக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது அதில் 03 கூட்டங்கள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தன.

5.4 கொள்வனவுத் திட்டம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) பல்கலைக்கழகத்தினால் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய வருடங்களுக்காக கொள்வனவுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக புத்தங்கள் மற்றும் வெளியீடுகளை கொள்வனவு செய்வதற்காக திறைசேரியிடமிருந்து கிடைத்த ரூபா 7.5 மில்லியனில் ரூபா 3.2 மில்லியனான பாரிய தொகையொன்று சேமிக்கப்பட்டிருந்தது.

(ஆ) கொள்வனவுத் திட்டத்திற்கு இணங்க ஆண்டின் கொள்வனவு நடைமுறைகள் முறையாக அமுல்படுத்தப்படாத காரணத்தினால் 03 மாதங்களில் 10 சந்தர்ப்பங்களின் போது ரூபா 2,360,800 பெறுமதியான கணனிகள் பல்வேறு விலைகளின் கீழ் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

5.5 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதீடு தயாரிக்கப்படும் போது 25 செலவின விடயங்களில் மிகை மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்ததுடன் 22 செலவின விடயங்களில் ஏற்பாடுகளை விஞ்சிய செலவினங்கள் செய்யப்பட்டமையும், ஒரு செலவு விடயத்தில் மொத்த ஏற்பாட்டுத் தொகைகளும் சேமிக்கப்பட்டிருந்தமையும், மாணவர் நிதி உதவிக்காக பாதீட்டில் உள்ளடக்கப்படாமல் ரூபா 25,606,250 தொகையான செலவினங்களும் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் பாதீடானது நிதி முகாமைத்துவ செயற்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்படாதிருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

5.6 ஆண்டறிக்கையினை சபையில் முன்வைக்கப்படுதல்

2003 யூன் 2 ஆந் திகதிய பீஈடி/2 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபத்தின் 6.5.3 ஆம் பிரிவின் பிரகாரமும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின்

14(1) ஆம் பிரிவின் பிரகாரமும், கணக்காண்டு முடிவடைந்து 150 தினங்களுக்குள் பாராளுமன்றத்திற்கு முன்வைக்கப்பட வேண்டிய 2010 ஆம் ஆண்டின் ஆண்டறிக்கை 2012 செப்தெம்பர் 25 ஆந் திகதி வரையிலும் முன்வைக்கப்பட்டமைக்கான சான்றுகள் காணப்படவில்லை.

## 5.7 சமூக மற்றும் சுற்றாடல் பொறுப்புக்களை நிறைவேற்றுதல்

ஆட்சேர்ப்பு நடைமுறைகளின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் பிரயோக விஞ்ஞான பீடத்தின் விரிவுரை பதவிகளுக்கான அடிப்படைத் தகைமை சிறப்புப் பட்டமாக இருக்க வேண்டியதுடன் அந்த பீடத்தினால் வழங்கப்பட்ட பட்டம் சிறப்புப் பட்டமாக இல்லாத காரணத்தினால் 2007 ஆம் ஆண்டிலிருந்து இது வரையிலும் இந்த பீடத்தினால் சாதாரண பட்டம் பெற்று வெளியேறிய 31 பேரும் அந்த பீடத்திலோ அல்லது ஏனைய பல்கலைக்கழகங்களிலோ தொழில்வாய்ப்புக்களைப் பெறும் சந்தர்ப்பங்கள் இழக்கப்பட்டிருந்தன.

## 6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் தொடர்பாக கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வப்போது உபவேந்தரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்தன. பின்வரும் கட்டப்பாட்டுப் பகுதிகளில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) நூலக புத்தகங்கள் கொள்வனவு
(ஆ) நிர்மாண ஒப்பந்தங்கள்
(இ) முற்பணம் வழங்குதலும் தீர்த்தலும்
(ஈ) வெளிவாரி பாடநெறிகள்
(உ) இருப்புக் கட்டுப்பாடு
(ஊ) பதவியணியினர்
(எ) பாதீடு
(ஏ) கொள்வனவு

ஒப்பம் : எச்.ஏ.எஸ்.சமரவீர
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

**<u>இலங்கை வயம்ப பல்கலைக்கழகத்தின் 2011 ஜனவரி 31 உடன் முடிவடையும் வருடத்திற்கான நிதிக் கூற்று தொடர்பான 1978, 16ம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 108(2) ம் பிரிவு, மற்றும் 1971, 38ம் இலக்க நிதியதிகளச் சட்டத்தி 13(ஏ) பிரிவின் படி கணக்காய்வாளர் தகைமை அதிபதியின் அறிக்கை</u>**

2.2 . <u>நிதிக் கூற்றுகள் மீதான கருத்துரைகள்</u>

2.2.1 . <u>இலங்கை கணக்கீட்டு நியமங்கள்</u>

இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 18 இற்கேற்ப பெறுமதி ரூபா. 15847454 ஆகிய ஐந்தொகைப் பூச்சியமாகக் காட்டப்பட்டிருந்த சொத்துத் தொகுதிகள் 7 இற்கு அமைவாக பல்கலைக்கழகத்தின் பயனுள்ள நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்படும் சொத்துக்கள் மீள் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கிற்டுட்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**பல்கலைக்கழகத்தின் நிலையான சொத்துப்பட்டியலைத் தற்காலப் படுத்துவதற்காக அரசியல் பிரதேச செயலகங்கலுக்குச் சேர்த்துக் கொள்ளப்பட்ட புதிய பத்து பட்டதாரிகளின் சேவையைப் பெற்றுக் கொள்ள முயற்சி யெடுக்கப்பட்ட போதும் அதற்குத் தேவையான இயலுமை அல்லது**
**அறிவு அவர்களுக்கு இல்லை யென்பது தெரிய வந்தது. இலங்கை மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் இதனை செய்ய எடுத்த முயற்சியும் பயனற்றுப் போனது. ஆகையால் முறையான நிலையான சொத்துப் பட்டியல் ஒன்றைத் தயாரிக்கும் செயற்பாட்டை தகுதியான வெளி நிறுவனமொன்றிற்கு அல்லது நபருக்கு ஒப்படைத்தல் பொருத்தமானதென 39 வது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டதுடன், இதனை நிருவாக சபைக்கு முன்வைத்து அனுமதி பெறுவதெனவும் முடிவு செய்யப்பட்டது.**

2.2.2 <u>கணக்கீட்டுக் கொள்கைகள்</u>

பின்வரும் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) வட்டி வருமானமானது நிதியின் கீழ் கணக்கிடப்பட வேண்டியிருப்பினும் பல்கலைக்கழகத்திற்கு பல்வேறு நிதியங்களிலிருந்து கிடைக்கப்பெற்ற ரூபா 1,457,411 பெறுமதியான வட்டி நிதிக் கூற்றுகளில் காட்டப்பட்டிருக்க வில்லை

**வட்டிவருமானமாக நிலையான வைப்புகளிலின் மூலம் கிடைக்கும் வட்டி காட்டப்பட்டிருப்பதுடன் கணக்கீட்டுக் கொள்கையின் 8.1 (b) இலக்கப் பிரகாரம் காசாக கணக்கிடப்பட்டிருந்தது.**

**இங்கு காட்டப்பட்டுள்ள வட்டிபணம் விஷேட கருமங்களுக்கான நிதியங்களின் முதலீடுகளால் கிடைத்தவையாதலால் முதலீடுமற்றும் நிதிக்கணக்கின் கீழ் கணக்கிடப்பட்டிருக்கிறது.**

(ஆ) நிதிக் கூற்றின் 2.4 இலான கொள்கைப்படி இருப்பு முதல் வருகை முதலில் வெளியிடப்பட வேண்டுமெனினும், அதிலிருந்து விலகிய சில சந்தர்ப்பங்கலும், 2.5 கொள்கையின்படி முடிவுறாத ஒப்பந்தங்கள் நிதியின் கீழ் கணக்கிடப்பட வேண்டியிருப்பினும், பதிலாக முறையில் கணக்குவைக்கப்பட்ட இரு சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.
களஞ்சியத்திலிருந்து இருப்பு விநியோகம் முதல் வருகை முதலில் வெளியிடும் முறை பின்பற்றப்படுகிறது.

**<u>முடிவுறாத ஒப்பந்தங்கள் கணக்கு வைத்தல்</u>**

**முடிவுறாத வேலைகள் பொதுவாக முறையில் கணக்கு வைக்கப்படுகிறது. ஆனால் ஒப்பந்த வேலைகளின் பெறுமதி முறையில் கணக்கு வைக்கப்படாதிருந்ததுடன் அதனை 2012ம் வருடத்தில் உரிய முறையில் கணக்குகளைத் திருத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.**

2.2.3. <u>கணக்கீட்டுக் குறைபாடுகள்</u>

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

அ). ஊழியர் விருத்தி நடவடிக்கைகலுக்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட ரூபா 4500,000 உம், ஆய்வு நடவடிக்கைகளுக்காக சர்வதேச நிறுவனமொன்றும் உயர்கல்வி அமைச்சும் வழங்கிய ரூபா 967,750 ம் வருடத்தின் வருமானமாக கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை.

**இப்பணம் பல்கலைக்கழகத்தின் பொதுவான நடவடிக்கைகளுக்கு அப்பால் விஷேட செயற்றிட்டங்களுக்காக வழங்கப்பட்டுள்ளமையினால் வேறு வேறாகக் கணக்கு வைக்கப்பட்டுள்ளதுடன், சகல வரவுகளும் செலவுகளும் குறிப்பிடப்பட்டுள்ளன.**

**135030 – ஊழியர் விருத்தி நடவடிக்களுக்கெனவே பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் இத்தொகை வழங்கப்பட்டுள்ளது.**

**133011 – கால்நடை மீனவ மற்றும் போசனை பீட சிரேஷ்ட விரிவுரையாளரான திருமதி JADSS.ஜயகொடி அவர்கள் மேற்கொள்ளும் ஆய்வுக்கென இத்தொகை வழங்கப்பட்டுள்ளது.**

**133103 - இது விவசாய அமைச்சினால் ஆய்வுகளுக்கென முற்பணமாக வழங்கப்பட்டுள்ளது.**

ஆ). பல்கலைக்கழகத்தினால் நடத்தப்பட்டடு முடிவுற்ற பாடநெறிகளின் இலாபத்தின் 10% உபவேந்தரின் நிதியத்திற்கு வரவு வைக்கப்பட வேண்டுமென மதிப்பீட்டறிக்கையில் குறிப்பிடப்பிடப்பட்டிருந்த போதும் இரு பாடநெறிகளின் 4 கட்டங்களின் வருமானம் ரூபா 352,620 வரவு வைக்கப்பட்டிருக்க வில்லை அத்துடன் மேலும் 10 கட்டங்களிலான 4 பாடநெறிகளின் மூலம் வரவு வைக்கப்படவேண்டிய தொகையாவது காட்டப்பட்டிருக்கவில்லை.

பல்கலைக்கழகத்தினால் நடத்தப்படும் முடிவுற்ற பாடநெறிகளின் இலாபத்தின் 10% மட்டும் **2011.12.31** திகதிக்குள் உபவேந்தர் நிதியத்தில் வைப்புச் செய்யப்பட்டுள்ளது. ஏனைய பாடநெறிகள் முடிவுற்ற பின் உரிய கணக்குகளுக்கு வரவு வைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

ஆ). பட்டப் பின் பாட நெறிகளுக்கென குளியாப்பிட்டிய இலங்கை வங்கியின் உள்ள நடைமுறைக்கணக்கில் 2011 ஜனவரியிலிருந்து டிசம்பர் வரை அறியப்படாத வைப்புகளான ரூபா. 435750 அறியப்பட்டு கணக்கிடுவதற்கான நடவடிக்கை மேற்கொண்டிருக்கப்படவில்லை.

**இவ்வறியப்படாத வைப்புகளில் ரூபா 323,250/- பெறுமதியனவை தற்போதைக்கு அறியப்பட்டிருப்பதோடு மேலும் அறியபப்படாதவை முறைப்படி கணக்கிற்கு உட்படுத்தப்பட்டுள்ளது. இதற்காக 2013ம் வருடத்திலிருந்து காப்புறுதி டிப்லோமா, ஆங்கில டிப்லோமா என்பவற்றிற்கு பணம் செலுத்துவது வயம்ப பல்கலைக்கழத்தின் “சரப்” ஊடாக மட்டுமே செய்யத் தீர்மானித்திருப்பதோடு MBA பாடநெறி மாணவர்களுக்கு மட்டும் நாட்டின எந்ததொரு இலங்கை வங்கிக் கிளையிலும் பணம் செலுத்த வசதி செய்யப்படிருக்கிறது.**

**இது தொடர்பாக இலங்கை வங்கியின் வடமேல் மாகணத்தின் சகல பிரதேச காரியாலயங்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதுடன், அதன்படி 2013ம் வருடத்திலிருந்து வங்கிக் கூற்றில் குறித்த பெயர் பதிவிலக்கம் அல்லது விண்ணப்ப இலக்கம் என்பவற்றை குறிப்பிட்டு அனுப்புமாறு இலங்கை வங்கிக்கு எடுத்துறைக்கப்பட்டுள்ளது.**

2.2.4. <u>கிடைக்க வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்</u>

கீழ்குறிப்பிடப்படுபவை அவதானிக்கப்பட்டன,

அ 1999 இலிருந்து காணப்படும் ரூபா. **121342** பெறுமதியான கடன் மீதி இவ்வருடத்திலும் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2012ம் வருடத்தில் இவற்றுடன் ரூபா 49,030.39 தீர்க்கப்பட்டிருப்பதுடன், ரூபா 5438.00 பெறுமதியான தொகையைத் தீர்க்குமாறு 2012.10.08, 2012.12.19 ஆம் திகதியிட்ட கடிதங்களால் குறித்த சம்பந்தப்பட்டவர்களை அறிவுறுத்தப்பட்டுள்ளது.**

ஆ). சில வருடங்களாக சம்பள முற்பணக் கணக்கிலுள் காணப்படும் 2010 திசம்பர் 31 வரை தீர்க்கப்படாத சம்பள முற்பண நிலுவை ரூபா. 50,300 ஆகக் காணப்பட்டது.

இந்நிலுவைகளுள் பெரும்பகுதி 1999 இற்கு முன்பிருந்தே வருபவை ஆவதோடு, இவை வேறு பல்கலைக்கழகங்களுக்கு இடமாற்றம் பெற்றுச் சென்ற ஊழியர்களின் நிலுவைகளாவதுடன் அவற்றைத் தீர்த்து வைக்குமாறு உரிய பல்கலைலைக்கழகங்கள் அறிவுருத்தப்பட்டுள்ளது. ஏனைய சம்பள முற்பண நிலுவைகளைத் தீர்க்க நடடிைக்கை மேற்கொள்ளுமாறு உரிய தரப்பினர் வேண்டப்பட்டுள்ளனர்.

இ). 2007ம் வருடத்திலிருந்து 2010 டிசம்பர் 31ம் திகதி வரை 5 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்ட ஒப்பந்த முற்பணமாக ரூபா. 5550981 உம், 1996 இருந்து 2010 டிசம்பர் 31ம் தகதிவரை 31 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்டுள்ள வழங்கள் முற்பணமாக ரூபா. 1142,790 உம் 2003ம் வருடத்திலிருந்து 2010 டிசம்பர் 31ம் திகதிவரை 21 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்டுள்ள ரூபா 203,530 பெறுமதியான சேவை முற்பணமும் 2012 மார்ச் 31ம் திகதி வரையும் தீர்த்து வைக்கப்படவில்லை.

**<u>ஒப்பந்த முற்பணம்</u>**

**வேலை முடிந்த ஒப்பந்தங்களிலிருந்து ரூபா. 1878406.55 பெறுமதியான முற்பணம் தீர்க்கப்பட்டுள்ளதுடன், ஏனைய ஒப்பந்தங்களிலிருந்து அறவிடக் கூடியதான முற்பணங்கள் 12012 இறுதிக் கணக்குத் தயாரிக்கும் போது தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும்.**

**<u>வழங்கள் முற்பணம்</u>**

**மேற்கூறிய முற்பணம் குளியாப்பிட்டிய, மற்றும் மாகந்துர வளாகங்களிலுள்ள நூலகங்களுக்கு புத்தகங்களும், சஞ்சிகைகளும் பெற்றுக் கொள்வதற்காக வழங்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு சஞ்சிகையினதும் சகல பிரதிகளும் இதுவரை முழுமையாக கிடைக்க வில்லையாதலால் முற்பணங்கள் தீர்க்கப்படவில்லை. கிடைக்கப்பெறாத சஞ்சிகைப் பிரதிகள் தொடர்பாக ஞாபகமூட்டல்கள் நடைபெற்றுள்ளன.**

**<u>சேவை முற்பணங்கள்</u>**

**மேற்கூறிய சேவை முற்பணம் உரிய தரப்பினரிடமிருந்து உரிய கடிதங்கள் கிடைக்கப்பெற்றதன் பின்பு தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.**

2.2.5. <u>கணக்காய்விற்கும் போதிய சான்றுகள் இன்மை</u>

ரூபா 121,054,602 பெறுமதியான காணிகளின் உறுதி, ரூபா 737,866,826 பெறுமதியான நிலையான சொத்துகளின் பட்டியல், ரூபா 6, 607,263 பெறுமதியான நீர் வழங்கல் திட்டத்தின் சொத்துகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

(i) <u>காணி உறுதி, ஒப்பானை</u>

**பல்கலைக்கழகத்தின் குளியாப்பிட்டிய வளாகத்திற்காகச் கைப்பற்றப்பட்ட காணிகளுக்கான இழபீடு, வட்டி என்பன செலுத்தி முடிக்கப்பட்டிருப்பினும் இன்னும் குறித்த காணிகளின் ஒப்பாணை கிடைக்கப் பெறவில்லை இவற்றை பல்கலைக்கழத்திற்கு ஒப்படைப்பதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகவும், காணி ஆனையாளரின் அனுமதி கிடைக்கப்பெற்றவுடன் அதனை இயன்ற கதியில் செய்வதாகவும் குளியாப்பிட்டிய (மேற்கு) பிரதேச செயலாளர் எழுத்து மூலம் அறிவித்துள்ளார். இக்காணிகலுக்கான பணம் முற்றாக செலுத்தி முடிக்கப்பட்டதை காணி அமைச்சிற்கு அறிவிக்கப்பட்டிருப்பினும் காணி ஆனையாளர் நாயகத்தின் அனுமதி இன்னும் கிடைக்கவில்லை என 2012.11.21ம் திகதி தொலைபேசி மூலம் வினவப்பட்டதற்கு பிரதேச செயலாளரினால் அறிவிக்கப்பட்டது.**
**"பிம் சவிய" வேலைத்திட்டத்தின் கீழ் அளக்கப்பட்டு பல்கலைக்கழகத்திற்கு ஒப்படைக்கப்பட விருக்கும் மாகந்துர வளாகக் காணியின் கிடைப்படம் கிடைத்தவுடன் வர்த்தமானியில் பிரசுரித்த ஒப்படைக்க நடவடிக்கை எடுப்பதாக பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார். (இணைப்பு – 1) இது தொடர்பாக 2012.11.21 ம் திகதி தொலைபேசியில் வினவப்பட்டபோது இன்னும் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படவில்லை. எனக் கூறினார்.**

**<u>மதிப்பீட்டறிகை, நிலையான சொத்துப்பட்டியல்</u>**

**இலங்கை வயம்ப பல்கலைக்கழகத்தின் முறையான நிலையான சொத்துப்பட்டியல் தயாரிக்கும் வேலையை தகைமை பெற்ற வெளி நிறுவனமொன்றோ தனிநபருக்கோ வழங்குதல் பொருத்தமென 39ம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக்குழு கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதுடன், அதனை பரிபாலன சபைக்கு சமர்பித்து அனுமதியைப் பெற்றுக்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டது.**

**உபபிரதிகள்**

**நிலையான சொத்துப்பட்டியல் தயாரிக்கப்பட்ட பின்னர் இத்தேவை பூரணப்படுத்தப்படும்**

2.2.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காமை

பின்வரும் சந்தர்ப்பங்கள் அவதானிப்புக்குள்ளாகின.

| சட்டங்கள், விதிகள், பிரமானங்களுக்கான முன்வைப்புகள் | இணங்காமைகள் |
|---|---|
| அ). அதிகார சட்டங்கள்<br>1978ம் ஆண்டின் 16ம் இலக்க பல்கலைக்கழக அதிகரச் சட்டத்தின் xiii ஆம் அத்தியாயத்தின் 99 (இ) பிரிவு | எந்தவொரு தோற்றுவாய் மூலமும் ஈட்டபபடும் சகல வருமானங்களும் பல்கலைக்கழக நிதித்தில் வரவு வைக்கப்பட வேண்டுமெனினும் அந்நியமனங்களுக்குப் புறம்பாக 04 பாடநெறிகள், 06 செயற்றிடங்களின் மூலம் பெறப்பட்ட ரூபா. 19,127,924 வருமானம் நிதிக் கூற்று களில் வேறு பொறுப்புக்களின் கீழ் கணக்கு வைக்கப்ப ட்டிருந்தது. |

**விஷேட நேக்கங்களுக்காகச் சேர்க்கப்படும் நிதிகள் வேறாக கணக்கு வைத்திருக்க முடியும் என 1978, 16ம் இலக்க பல்கலைக்கழக அதிகாரச்சட்டத்தின் 101ம் பிரிவில் குறிப்பிடப்பட்டிருப்பதுடன் அதன் படி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பாடநெறிகளி ன் மூலம் ஈட்டிய வருமானங்கள் வேறு வேறாக கணக்குக் கூற்றுகளில் காட்டப்பட்டுள்ளது. வேறு வேறாக கணக்குகள் வைத்திருந்த போதும், மொத்தத்தில் அவை பல்கலைகக்கழக நிதியில் அடங்குகின்றன.**

| | |
|---|---|
| ஆ). பல்கலைக்கழகத் தாபனக் கோவை<br>xxviiம் அத்தியாயத்தின் 2.1.1 ம் பிரிவு | பல்கலைக்கழகத்தற்கு செந்தமானசகல வாகணங்களும் பதிவாளரின் பெயரில் பதிவு செய்யுப்பட வேண்டும் மெனினும், வயம்ப பல்கலைக்கழகத்திற்குறிய 06 வாகணங்கள் அவ்வாறு பதிவு செய்யப்பட்டிருக்க வில்லை |

**KP- 1785 இலக்க வாகணம் பிற்கொடுப்பணவு முறையில் கீழ் திரைசேரியினால் பெறப்பட்டு பல்கலைக்கழகத்திற்கு வழங்பட்ட வாகணமாகும். இதனைப் பதிவு செய்தலையும் திறைசேரியே மேற்கொண்டிருப்பதுடன் அது பல்கலைக்கழக தாபனக்கோவையின் விதந்துரைப்புக்கேற்ப அன்றி அரச தாபனக் கோவையின் விதப்புரைக் கேற்ப உபவேந்தரின் பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ளது.**

**அறிகையில் அவதானிப்புக் குட்பட்ட ஏனைய வாகனங்கள் பதிவாளரின் பெயரில் பதிவு செய்யப்பட வில்லையெனினும், பல்கலைக்கழகத்தின் பெயரில் பதிவு செயயப்பட்டுள்ளது. பல்கலைக்கழகத்தின் சொத்துக்களுக்கான பொறுப்பாளர் பதிவாளராகையால் பல்கலைக்கழகத்தின் பெயரிளான பதிவு பதிவாளரின் பெயரிளான பதிவுக்குச் சமனாகக் கருதலாம். எனினும் பல்கலைக்கழக**

**வாகனங்களைப் பதிவாளரின் பெயரில் பதிவு செய்யுமாறு கோரப்பட்ட கடிதம் திரைசேரிக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. (இணைப்பு – 2)**

| | | |
|---|---|---|
| இ). | இலங்கை சனநாயகச் சோசலிசக் குடியரசின் தாபனக் சேவை XIXம் அத்தியாயத்தின் 5.5ம் பிரிவு | பல்கலைக்கழகத்திற்குச் சொந்தமான உத்ததியோக பூர்வ விடுதிகள், வாடகைக்கப் பெறப்பட்ட வீடுகளில் வதியும் உத்தியோகத்தர்களிடமிருந்து தாபனக்கோவைக்கமைவாகக் வாடகை அறவிடாது பல்கலைக்கழக ஊழியர்களின் வதிவிடக் குழு தீர்மானித்த முறையில் வாடகை அறவிடப்பட்டமையால் உரிய வருடத்திற்கான தாபனக் கோவை குறிப்பிடும் வாடகையிலும் ரூபா. 714,446 குறைவாக அறவிடப்பட்டுள்ளது. |

**இப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு சட்டமா அதிபரின் ஆலோசனையைப் பெற்றுக் கொள்ளும் பொருட்டு 2012.09.11ம் திகதி சட்டமா அதிபருக்கு கடிதம் ஒன்று அனுப்பபட்டது. அதன்படி விளக்கம் கேட்பதற்காக 2012.11.08ம் திகதி துனைப்பதிவாளரை அரச கொன்ஸலர் (State Consul) ஹஸ்லி ரஸீக் அவர்கள் அழைத்திருந்தார். அங்கு இடம் பெற்ற கலந்துறையாடலில் அரச முயற்ச்சியான்மை ஆலோசனைக் குழுவினது தீர்மானத்தையும் கவனத்தில் கொண்டு இறுதித் தீர்வொன்றை எட்டுதல் பொருத்தமெனத் தீர்மானிக்கப்பட்டது. அதற்கேற்ப அவ்வறிவுறுத்தல்களின் பிரதியென்றும், பல்கலைக்கழகத் தாபனக்கோவையில் இது தொடர்பான விதப்புரைகளிருப்பின் அதனது பிரதியொன்றுடன் கொன்ஸலருக்கு மற்றுமொரு கடிதத்தை அனுப்புமாறு அறிவுறுத்தப்பட்டது.**

**இன்னும், ஊழியர்களுக்குத் தங்குமிடம் வழங்கள் தொடர்பாக பல்கலைக்கழக அதிகாரச்சட்டத்தில் (29:n,45:1,2, 2-iii,ix,x,xi) மட்டுமன்றி பல்கலைக்கழகத் தாபனக் கோவையிலும் விதப்புரைகள் உள்ளன என்பதைத் தெரிவிப்பதற்கு விரும்புகிறேன்.(Chapter I,7:3C)**

**அரச முயற்சியாண்மை தொடர்பான ஆலோசனை சபையின் தீர்வு கிடைக்கப்பெற்றவுடன் சகல விபரங்களும் இறுதித் தீர்வொன்றைப் பெறுவதற்காக கொன்ஸலர் அவர்களுக்கு அனுப்பிவைக்கப்படும். என்பதையும் தெரிவிக்கிறேன்.**

| | | |
|---|---|---|
| ஈ). | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிமாணக் கோவை 1). நி.பி.371(2) (ஆ) – பிரிவு | இடைக்காலக் கட்டுநிதியாக ஒரு சந்தர்ப்பத்தில் வழங்கத்தக்க உயர் பெருமதி ரூபா. 20,000 எனினும் வரையறையை மீறி 05 சந்தர்ப்பங்களில் ரூபா. 173,300 முற்பணமாக வழங்கப்பட்டுள்ளது. |

**பல்கலைக் கழகத்தின் நடவடிக்கைகள் தாமதமின்றி நடை பெறுவதற்காக பண மதிப்பீடு மற்றும் வரவு செலவு அறிக்கைகளுக்கு அமைவாக கொடுப்பனவுகள் செய்யப்பட்டுள்ளன. எவ்வாறிருப்பினும் இப்போது சகல முற்கொடுப்பணவுகளும் ரூபா. 20,000.00 இற்கு வரையறுக்கப்பட்டிருக்கிறது.**

(II) நி.பி. 396 (இ).

விநியோகிக்கப்பட்டிருந்த திகதியிலிருந்து 6மாத காலத்தை தாண்டியிருந்த ரூபா. 57,800 பெறுமதியான 28 காசோலைகள் தொடர்புாக நிதிப் பிரமானங்களுக் கமைவாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை

**2011.12.31ம் திகதிக்கு வழங்கப்பட்ட திகதியிலிருந்து 06 மாதங்களை தாண்டிய காசோலைகள் சகலதும் செல்லுபடியற்றதாக்கப்பட்டிருப்பதுடன், வழங்கப்பட்ட திகதியிலிருந்து 06 மாத கால எல்லையைத் தாண்டிய எந்தவொரு காசோலையும் வங்கி இணக்கக் கூட்டுகளில் காட்டபடவில்லை.**

(III). நி.பி 571ம் பிரிவு

வைப்புச் செய்யப்பபட்ட தினத்திலிருந்து இரு வருடங் களைத் தாண்டிய ரூபா. 3,897,713 பெறுமதியான பல்வேறு வைப்புகள் தொடர்பாக நிதிப் பிரமாணங்க ளுக்கமைவாக எடுக்கப்படாமை.

**இந்த வைப்புக்களை மீளப்பெற்றுக்கொள்ளுமாறு உரிய தரப்பினர் அறிவுறுத்தப்பட்டுள்ளதுடன், அதன் பிறகு கிடைத்த வேண்டு கோலுக்கேற்ப ரூபா. 8,500 மீளளிக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் கிடைக்கும் வேண்டுகோள்களை அடிப்படையாக கொண்டு ஏனைய வைப்புகளும் மீளளிப்புச் செய்யப்படும்.**

(iv). நி.பி 835(I)

கட்டிடங்கள் குத்தகைக்குப் பெறும் போது அமைச்சுச் செயலாளரின் அனுமதி பெறப்பபட வேண்டு மெனினும் அவ்வாறு அனுமதி பெறாது குத்தகைக்கும் பெறப்பட்ட கட்டிடங்களுக்குக் குத்தகைத் தொகையாக ரூபா. 93,869,0000 வழங்கப்பட்டிருக்கிறது. தற்போதை க்கு அவ்வனுமதியைப் பெற்றுக் கொள்வதற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தலைவர் மற்றும் அமைச்சின் செயலாளர் ஆகியோருக்கு சமர்பிக்கப்பட்டிருப்பதாக உபவேந்தரின் பதிலில் குறிப்பிடப்பட்டிருந்தது.

**தற்போது அவ்வனுமதி கிடைக்கப் பெற்றிருக்கிறது. (இணைப்பு 03-I,03-II)**

(உ) அரச நிருவாகச் சுற்றறிக்கை

11/2006 அரச நிருவாகச் சுற்று நிருபம்

உரிய வருடத்தினுள் உபவேந்தருக்கு அனுமதிக்கப்பட்ட எரிபொருள் வரம்பைத் தாண்டி ரூபா. 91,244 பெறுமதி யான மேலதிக எரிபொருள் பெறப்பட்டுள்ளதுடன் இதற்காக ஆளுனர் சபையில் 2012.08.23 இல் அனுமதி பெறப்பட்டுள்ளது.

**உபவேந்தரின் உத்தியோக பூர்வ வாகனம் எரிபொருள் அனுமதி வரம்பைத் தாண்டி ஏப்ரல்,மே, ஜூலை, ஆகஸ்ட், ஒக்டோபர், நவம்பர், டிசம்பர், ஆகிய மாதங்களில் மட்டுமே பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இக்கால எல்லையினுள் 03 தடவைகளில் எரிபொருள் விலையேற்றம் நடந்திருக்கிறது.**

**இவ்வாறு அனுமதித்த எரிபொருள் எல்லையைத் தாண்டுவதற்கு பின்வரும் காரணிகள் காரணமாகியிருக்கின்றன.**

**I. மாகந்துர வளாகத்தில் நடந்த பல்வேறு விழாக்களுக்கு பல தடவைகள் பயனிக்கவேண்டியிருந்தமை**
**(இரு வளாகங்களுக்குமிடையிலான தூரம் சுமார் 22 Km)**

**II. தொடர்ச்சியாக பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழுவும் மற்றும், உயர் கல்வி அமைச்சில் இடம் பெற்ற கூட்டங்கலிலும் பங்குபற்றியமை**

**III. பல்கலைக்கழக உபவேந்தர்களினதும், பணிப்பாளர்களதும் கூட்டம் தீர்வு பூராவுமான சகல பல்கலைக்கழகங்களிலும் மாதாந்தம் நடைபெற்றமையால் கூடுதலான தடவைகள் பயனிக்க வேண்டி ஏற்பட்டமை.**

**ஆகையால் அவதானிப்பில் குறிப்பிடப்பட்ட மேலதிக எரிபொருள் பாவனைக்கான தொகை ரூபா. 91,244.17 இற்கு ஆளுனர் சபையின் அனுமதியைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது.**

2.2.7 முரண்பாட்டை ஏற்படுத்தும் கொடுக்கல் வாங்கல்கள்

2011ம் ஆண்டு பல்கலைக்கழகத்திற்கான பாதுகாப்புச் சேவைக்கு தனியார் நிறுவனமொன்றுடன் 2011.06.01 - 2012.01.31ம் திகதி வரை ஒப்பந்தம் செய்யப்பட்டு, ஒப்பந்தம் முடிவடைய முன்பு உயர்கல்வி அமைச்சின் செயலாளரின் இல HE/AD/Security, 2011.09.22 திகதி கடிதத்தின் அறிவுரைப்புக்கேற்ப வேறு ஒப்பந்தக் காரரிடமிருந்து பாதுகாப்புச்சேவையைப் பெற்றுக் கொண்டமையினால் 2 1/2 மாத காலத்திற்கு ரூபா. 4,768,340 ஐ பல்கலைக்கழக நிதியம் நட்டப்பட்டிருக்கிறது.

**வயம்ப பல்கலைக்கழகத்திற்கான பாதுகாப்புச்சேவையைப் பெற்றுக்கொள்வதில் 2011.10.13 வரை கொள்வனவுச் செயற்பாட்டிற்கமையச் செயற்பட்டுள்ளதுடன், அரச நிதிச் சுற்று நிறுப இல 445 உயர் கல்வி அமைச்சின் செயளாலர், மற்றும் பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் போன்றோரின் கடிதங்களுக்கேற்ப பல்கலைக்கழகத்தின் பாதுகாப்புச் சேவை வரையறுக்கப்பட்ட "ரக்னா ஆரக்சக லங்கா" நிறுவனத்திடம் வழங்கப்பட்டது. இந்நிறுவனத்திடம் பாதுகாப்புச் சேவையை ஒப்படைத்தல் மூலம் ஏற்படும் மேலதிக நிதிச் செலவு 2011.09.14ம் தகதிய கடிதத்தினால் பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழுவிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி மதிப்பீட்டுக்கு விஞ்சிய மேலதிக நிதியைப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.**

03 <u>நிதி மீளாய்வு</u>

3.1 <u>நிதிசார் விளைவுகள்</u>

சமர்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுகளின் படி 2011 டிசம்பர் 31ம் திகதியுடன் முடிவடையும் வருடத்தினுள் பல்கலைக்கழக நடவடிக்கைகளின் நிதிசார் விளைவுகள் மீண்டவருஞ் செலவுகளுக்கான அரச மாணியம் கணக்கிடப்பட முன்னர் ரூபா. 506,817,00 பற்றாக்குறையானதுடன், அதற்கொத்ததாக சென்ற வருடத்தின் பற்றாக்குறை ரூபா. 419,030,000 ஆகவிருந்தது. பல்கலைக்கழகத்திற்கு மீண்டுவருஞ் செலவுகலுக்காக அரசினால் கிடைத்த ரூபா 406,248,000 ஒதுக்கீடு கணக்கிலேடுக்கப்பட்டதன் பின்னர் குறித்த மீளாய்வு வருடத்தின் பற்றாக் குறையாக ரூபா. 100,533,000 வரை குறைந்ததுடன், அதற்கொத்ததாக கடந்த வருடத்தின் மீண்டுவரும் செலவுகளுக்காகக் அரசால் கிடைத்த ரூபா. 327,535,000 ஒப்பீடு செய்யப்பட்டதன் பின்னர் பற்றாக்குறை ரூபா. 91,495,000 ஆகக் குறைந்தது அதன்படி மீளாய்வு வருடத்தின் நிதிசார் விளைவு ரூபா. 9,038,000 இலான பற்றாக்குறையைக் காட்டுகிறது.

நிதிசார் விளைவு இவ்வாறு பற்றாக்குறையாவதற்கு ஆய்வுக் கொடுப்பனவுகள் ரூபா. 11,250,000 இனால் அதிகரித்தல் ஏனைய கொடுப்பணவுகள் ரூபா 5,833,000 ஆல் அதிகரித்தல் கொடுப்பணவு ரூபா. 8,833,000 இனால் அதிகரித்தல் என்பன பிரதான பங்களிப்புச் செய்திருக்கின்றன.

4. <u>செயற்பாட்டு மீளாய்வு</u>

4.1 <u>செயலாற்றுகை மட்டம்</u>

2011ம் வருடத்தில் ஒவ்வொரு பீடத்திற்கான செலவு மாணவர் தொகை, ஒருமாணவனுக்கான செலவு என்பன கீழே காட்டப்பட்டுள்ளது.

| விபரம் | வணிகக்கல்வி நிதிப்பீடம் | பிரயோக விஞ்ஞான பீடம் | விவசாய பயிர்செய்கை முகாமைத்துவ பீடம் | கால்நடைகள், மீனவ மற்றும் போசனை பீடம் |
|---|---|---|---|---|
| 2011ம் வருடத்தின் செலவு ரூ | 44,648,076 | 50,288,773 | 59,222,043 | 59,739,834 |
| மாணவர் தொகை | 1079 | 358 | 396 | 323 |
| ஒரு மாணவனுக்கான செலவு ரூபா | 41,379 | 140,471 | 149,550 | 184,953 |

இது தொடர்பாக கீழ்வரும் அவதானிப்புகள் செய்யப்படுகின்றன.

அ). 2011ம் வருடத்தில் ஏனைய பீடங்களை விட ஒரு மாணவனுக்கான செலவு கால்நடைகள் மீனவ, மற்றும் போசனை பீடம், விவசாய மற்றும் பயிர்செய்கை முகாமைத்துவ பீடம் என்பவற்றில் உயர் பெறுமதியைக் கொணடடிருந்தமை.

- **கால் நடைகள், மீனவ மற்றும் போசனை பீடம்.**

  - **புதிய பாடநெறி, பாட இணைப்புகள் உள்ளடங்கலாக பீடத்தினுள் இரு பாடநெறிகள் நடைபெறுவதால் அதற்கு பெரும்பாலும் வெளி விரிவுரையாளர்களின் உதவியைப் பெற்றுக்கொள்வதற்கு தேவையான ஒதுக்கீடு செய்ய வேண்டி ஏற்படுகின்றமை.**

  - **பீடத்தினுள் சகல வசதிகளுமடங்கிய விலங்கு பண்ணை (கால் நடை/ நன்னீர், உவர்நீர் மீன்) இல்லாமையால் காளப்பயனங்கள் காளப்பயிற்சிகள் மூலம் பெரும்பாலான கற்பித்தல்கள் செய்ய வேண்டியிருப்பதனாலும், காளப்பயனங்கள் கூடிய தூரத்தைக் கொண்டவையாக அமைவதாலும் அதற்கான செலவுகளுக்காக சந்தர்ப்பத்திற்கேற்றவாறு நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டி ஏற்படுகின்றமை.**

  - **ஆய்வுகூட மட்டப் பரீசோதனைகள் தொடர்பான கல்வி நடவடிக்கைகளில் தேவைப்படும் இரசாயனங்களின் விலை அதிக மாதலால் கூடிய நிதி ஒதுக்க வேண்டியமை.**

  - **ஏனைய பீடங்களைப் போலன்றி இப்பீடத்தின் இருபாட நெறிகளுக்குமான சகல பரீட்சைகளுக்குமான எழுத்துமூல, செயல் முறை வினாத்ததாள்களின் அச்சீடு முழுமையாகப் பீடத்தினுள்ளேயே இடம் பெறுவதால் அதற்கான காகிதாதிகள், அச்சுமை, மற்றும் ஏனைய உபகரணங்கள், நடைமுறைச் செலவுகளுக்காக குறிப்பிட்டளவு நிதி செலவு செய்ய நேரிடுகின்றமை.**

- **விவசாய மற்றம் பயிர்ச் செய்கை முகாமைத்துவ பீடம்**

  **விவசாய விஞ்ஞானமானிப் பட்டப்பாடநெறியானது விரிவுரைகள், ஆய்வு கூடப்பரிசோதனைகள், கள ஆய்வுகள், களச்சுற்றுலாக்கள், ஆய்வுச் செயற்றிதிட்டங்கள் மற்றும் சேவைக்காலப் பயிற்சிகள் என்பனஅடங்கியதாகும். இதனால் ஒப்பீட்டு ரீதியாக இப்பீட ஒரு மாணவனுக்கான செலவு உயர் பெறுமதியை கொள்ளும் இது சகல விவசாய பீடங்களினதும் பொதுக்காரணியாகும். அத்துடன் 2011ம் வருடத்தினுள் புதிதாக ஆளணியினர் சேர்த்துக்கொள்ளப்பட்டமை, ஆய்வுகூட இரசாயனங்கள் மற்றும் உபகரணங்களின் வேகமான விலையேற்றம் காரணமாகவும் பீடத்தின் மொத்தச்செலவு அதிகரிப்பின் காரணமாகவும் ஒரு மாணவனுக்கான செலவு அதிகரித்துள்ளது.**

ஆ). பல்கலைக்கழகத்தின் மூன்று பீடங்களுக்கும் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களில் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையானோர் வேறு பல்கலைக்கழகங்களுக்கு மாறிச் சென்றிருந்தனர். இது கடந்த காலங்களுடன் ஒப்பிடும் போது கூடிய சதவீதமாக அவதானிக்கப்பட்டது. இது தொடர்பான விபரம் பின்வருமாறு

| பீடம் | வயம்ப பல்கலைக் கழகத்தில் பதிவு செய்த மாணவர் தொகை | வேறு பல்கலைக் கழகங்களுக்கு மாறிச் சென்ற மாணவர் தொகை | வேறுபல்கலைக்கழகங்களுக்கு மாறிச் சென்ற மாணவர் தொகை பதிவு செய்தவர்களின் சதவீதமாக |
|---|---|---|---|
| வணிகக்கல்வி நிதிப்பீடம் | 344 | 17 | 5% |
| பிரயோக விஞ்ஞான பீடம் | 146 | 98 | 67% |
| விவசாய பயிர்செய்கை முகாமைத்துவ பீடம் | 115 | 45 | 39% |
| கால்நடைகள், மீனவ மற்றும் போசனை பீடம் | 110 | 45 | 41% |

- **பிரயேக விஞ்ஞான பீடம்**

**பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழுவினால் 2010.04.06ம் திகதி அனுப்பப்பட்ட கடிதத்தின் படி 2010/2011 கல்வி ஆண்டுக்காக 150 மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதற்கு 78ம் பீடச்சபைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. அதன் படி பின் வருமாறு மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டனர்.**

| சேர்த்துக்கொள்ளல் | மாணவர்தொகை | பதிவு செய்த மாணவர் தொகை | மாணவர் தொகை குறித்து அனுப்பப்பட்ட கடிதத் திகதி |
|---|---|---|---|
| **ஆரம்பப்பதிவு** | **148** | **80** | **2011.07.20** |
| **முதல்கட்டம்** | **139** | **82** | **2011.09.05** |
| **இரண்டாம் கட்டம்** | **108** | **54** | **2011.09.26** |
| **மூன்றாம் கட்டம்** | **30** | **11** | **2011.10.25** |
| **நான்காம் கட்டம்** | **17** | **09** | **2011.11.11** |
| **உள்ளக இடமாற்றம்** | **06** | **04** | **2011.11.11** |

**இதன்படி 2010/2011 கல்வி விடயங்களில் மேற்கூறிய கட்டங்களின் கீழ் பிரயோக விஞ்ஞான பீடத்திற்கு 240 மாணவர்கள் பதிவு செய்யப்பட்ட போதும் இவ்வொவொரு கட்டத்திலும் உயர்பெறுபேறை அடிப்படையாகக் கொண்டு உயர் பாடநெறிகள் பயில்வதற்கு பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழுவினால் வேறு பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்கள் மாற்றப்பட்டதுடன் சுய விருப்பின் பேரில்**

பல்வேறு காரணங்களுக்காக மாணவர் பதிவை மீள வாங்கிக் கொண்ட சந்தர்ப்பங்களும் உள்ளன.
மேலும் பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழுவினால் வழங்கப்படும் மாணவர்கைநூலில், வேறு பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்கள் உயர்வு படுத்தப்பட்டு அனுப்பப்படும் போது அதனை கட்டாயமாக மாணவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதன்படி சுமார் 99 மாணவர்கள் பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழுவினால் உயர் பாடநெறிகலுக்காக மாற்றப்பட்டதுடன், சுயவிருப்பில் பதிவை மீளப்பெற்றவர்கலும் உள்ளனர் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

அத்துடன் கல்விக்கல்லூரி மற்றம், பிரயோக விஞ்ஞான பீடங்களில் மாணவர் வெற்றிடங்கள் நிரப்பும் பிரச்சினைக்குத் தொடர்ச்சியாக முகங்கொடுக்க நேரிடுவதாக விஞ்ஞானம் தொடர்பான பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழுவின் நிலைக்குழு கூட்டங்களில் (Standing Commitee on Sciences) பீடாதிபதிகள் முன்வைக்கின்றார்கள் இதனால் ஏற்படுகின்ற பிரச்சினைகளுக்கு புதிய மாணவர்களுக்கான கல்வி நடவடிகைகள் ஆரம்பிக்க முன்னர் உரிய அளவில் மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவதனாலேயே சிறப்பாகத் தீர்வு காணலாம்.

அதேபோல் 2010/2011 கல்வியாண்டு 2011.11.14 ம் திகதி ஆரம்பிக்கப்பட்டதுடன், எமது பீடத்தில் கல்வி நடவடிக்கைகள் ஆங்கில மொழியிலேயே இடம் பெறுகின்றன. அத்துடன், அதனோடிணைந்ததாக துரித ஆங்கில பாடநெறிகள் 10 இல் 01 நிறைவு செய்யப்படுகிறது. பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழுவால் மாணவர் வெற்றிடம் நிரப்புவதற்கான பெயர்பட்டியல் கிடைப்பதற்கு 03 அல்லது 04 வாரங்கள் செல்கின்றன. மேலும் கல்வி நடவடிக்கைகள் ஆரம்பித்ததுடன் தொடர்ச்சியான மதிப்பீடுகள் (Contirory assesment) செய்வதற்கு மாணவர்கள் தள்ளப்படுவதால் உரிய தினத்திற்கு பின்னர் கிடைக்கும் மாணவர்களைச் சேர்த்துக் கொள்ள முடியாது போகிறது.

மேலும், அடிக்கடி மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவதனால் கல்வி நடவடிக்கைகள் தாமதப்படுத்தப்படுவதோடு ஏனைய மாணவர்களின் கல்விக்கான காலவரையறைக்குப்பாதிப்பு ஏற்படுவதால் பீடச்சபையினால் 2011.11.14 ஆந்திகதியிலிந்து மாணவர்கள் சேர்த்துக் கொள்வதை நிறுத்த முடிவு செய்யப்பட்டது.

ஆனாலும், களனி, ருகுணு, சபரகமுவ, யாழ்பாணம், மற்றும் ஊவ வெல்லஸ்ஸ ஆகிய பல்கலைக்கழகங்களுக்கு தரமுயர்த்திய 31 மாணவர்கள் பிரயோக விஞ்ஞான பீடத்திலேயே தமது கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தீர்மானித்தமை சிறப்பான நிகழ்வாகக் குறிப்பிடலாம். இதன் படி 2010/2011 கல்வியாண்டிற்காகப் பதிவு செய்யப்பட்ட முழு மாணவர்தொகை 2012.06.30 இல் 141ஆகும்.

- கால் நடை, மீனவ மற்றும் போசனை பீடம்

மாணவர்கள் பதிவை ரத்துச் செய்து வேறு பல்கலைக்கழகங்களுக்கச் செல்வது பாடநெறிகளின் பண்புத்தரத்திற்காக மட்டுமன்றி, பலவருடங்களாக, மருத்துவ, பல்மருத்துவ, தோல் சுகாதாரம், மற்றும் விவசாய தொழிநுட்ப முகாமைத்துவம் போன்ற பாடநெறிகளுக்கான கூடிய கேள்வி நிலவுவதனாலுமாகும். அதன் படி முதலில் எமது பாடநெறிகளில் பதிவு செய்த மாணவர்களுக்கு, பின்னர் மேற்கூறிய பாடநெறிகளுக்கு செய்வதற்கான வாய்ப்பை வழங்குதலும், அது தொடர்பாக

**நோரடியாகவே மாணவர்களை அறிவுறுத்துதலும் மாணியங்கள் ஆணைக்குழுவினால் நிகழ்த்தப்படுகின்றது.**
**மேற்கூறிய காரணத்திற்கு மேலதிகமாக நிரந்தர வதிவிடத்திற்கான தூரம், பேராதனை, கொழும்பு, களனி போன்ற பல்கலைக்கழகங்களின் பிரசித்தமம் தாக்கம் செலுத்தும் ஏனைய காரணிகளாகக் குறித்துக்காட்ட விரும்புகிறேன்.**

- **விவசாய மற்றும் பயிர்செய்கை முகாமைத்துவ பீடம்**

**மருத்துவ, பல்மருத்துவ பட்டப்பாடநெறிகள் பொதுவாக கூடிய கேள்வியுள்ளவையாகும். அவ்வாறான பாடநெறிகளுக்குத் தெரிவு செய்யப்பட்டால் இப்பீடத்தில் பதிவு செய்திருந்த போதும் விட்டுவிட்டு மேற்கூறிய பாடநெறிகளுக்குச் செல்லல் பொதுவான விடயமாகும். அவ்வாறாயினும், இப்பீடத்திற்கு 2011இல் சோக்கப்பட்ட இவர்களின் எண்ணிக்கை 110 ஆகும். ஆனால் தற்போதைக்கு 114 பேர் கல்வி பெறுவதோடு வெற்றிடங்கள் எதுவும் இல்லை. அனுமதித்தலும் பார்க்கக் கூடிய தொகையினால் குறித்த வருடத்தினுள் கல்வி பெறுகின்றனர்.**

4.2 முகாமைத்துவ குறைபாடுகள்

இது தொடர்பாக கீழ்வருவென அவதானிக்கப்பட்டன.

அ). வயம்ப பல்கலைக்கழகத்தில் சேவையாற்றும் 08 விருவுரையாளர்கள் வெளிநாட்டுக்கு சென்று உடன்படிக்கையின் படி மீண்டும் உரிய திகதியில் சேவைக்கு மீளாமைகாரணமாக பல்கலைக்கழகத்திற்குச் செலுத்தவேண்டிய இழப்பீடு ரூபா. 10,524,210 ஐ அறவிடுவதற்கான முறையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.

I. **திரு HPV ரூபசிங்ஹ (விரிவுரையாளர்)**

**திருவாளர் ரூபசிங்ஹ விடமிருந்து கிடைக்க வேண்டிய தொகை ரூபா. 1,742,770.50 ஆகும். அத்தொகையில் அவருக்கு சொந்தமான EPF ரூபா. 939,324.63 ஐ அறவிடுவதற்கான அவரது நீக்கு நிதியை விடுவிப்பதற்கான அறிவித்தல் பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழுவிற்கு விடுவிக்கப்பட்டுள்ளது. மீதித் தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.**

II. **திரு WMEP விக்கிரமசிங்ஹ - சிரேஷ்டவிரிவுரையாளர்**

**இவரிடமிருந்து கிடைக்கவேண்டிய தொகை ரூபா. 2,386,193.22 ஆகும் EPF மீதி 1,812,179.83 ஆகும். செலுத்த வேண்டிய தொகைக்கு ஊழி. சே. லா. நிதியைப் பதிலீடு செய்வதற்கு விருப்பம் தெரிவித்திருப்பதுடன் மீதி 574,013.39 அவால் செலுத்தப்பட்டுள்ளது. ஊ.சே.நிதி மீதியான ரூபா. 1,812,179.83 ஐ அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.**

**III. NGSC ரத்னசரி – விரிவுரையாளர்**

**திருமதி ரத்னசிரி அவர்களிடமிருந்து கிடைக்கவேண்டிய தொகை ரூபா. 1162000.00 ஆகும் ஊ.சே.நிதி மீதியால் பதிலீடு செய்ய விருப்பம் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆகவே செலுத்த வேண்டிய முழுத்தொகையிலிருந்து ஊ.சே.நிதி மற்றும் செலுத்தப்பட்ட தொகை போக மேலும் செலுத்த வேண்டியிருப்பது ரூபா.**

4,024,398.00 - ரூபா. 955,018.78 – 1,162,000.00) ரூபா. 1,908,378.22 ஆகும். ஆத்தொகையை செலுத்துமாறு ஞாபகமூட்டல் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளதோடு அவரின் பதிலீட்டாளர்கலும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். அவரது பதிலீட்டாளர்கள் மீண்டும் ஞாபகமூட்டல் செய்யப்பட்டுள்ளதுடன் அவரின் ஊ.சே நிதியை பல்கலைக்கழகத்திற்கு அறவீடு செய்து கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

**IV. PWMLHK மாரம்பே – விரிவுரையாளர்**

இவரிடமிருந்து அறவிடப் பட வேண்டிய தொகை ரூபா1,606,602.83 ஆகும். ஊ.சே.நிதிமீதி ரூபா. 665,724.92 ஆகும். செலுத்த வேண்டிய தொகைக்கு ஊ.சே.நிதி மீதியைப் பதிலீடு செய்வதற்கு விருப்பம் தெரித்துள்ள தோடு மீதியை அவர் செலுத்தியுள்ளார் (ரூபா1,020,877.91) ஊ.சே.நிதியிலிருந்து ரூபா. 665,724.92 ஐ அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**V. திரு RMWS. ரத்னாயக்க – விரிவுரையாளர்.**

இவர் செலுத்த வேண்டிய தொகை ரூபா. 946,634.38 ஆவதுடன் அவருக்குரித்தான ஊ.சே.நிதி மீதி ரூபா. 707,367.01 ஐ அறவிடுவதற்கு அவரின் ஊ.சே.நிதியை விடுவிப்பதற்கான பத்திரம் அவருக்கு அனுப்பப்பட்டுள்ளது. மீதியைச் செலுத்துமாறு அவருக்கும், அவரது பதிலீட்டாளர்களுக்கும் அறிவுறுத்தப் பட்டுள்ளனர்.

**VI. திருமதி கலாநிதி UTK ஹேரத் - விரிவுரையாளர்**

2010.09.08 ஆம் திகதி இவர் சேவையிலிருந்து விலகியுள்ளார். ஆவர் மூலம் பல்கலைக்கழகத்திற்கு கிடைக்க வேண்டிய அறவீடுகள் பின்வருமாறு

| | | |
|---|---|---|
| 1. முறிகளின் பெறுமதி | ரூ. | 1430 535.50 |
| 2. கேட்டு விலகலில் காலம் கொடுக்காமையாள் | | |
| 3 மாதச் சம்பளம் | ரூ. | 87 720.10 |
| 4. கணக்குப் பகுதிக்குச் செலுத்த வேண்டியவை | ரூ. | 58 140.55 |
| மொத்தம் | ரூ. | 1576 396.15 |

ஊ.சே.நிதி மீதி ரூபா. 550,824.35 ஆகும் இம்மீதியால் அறவீடுகளைச் செலுத்த விரும்பியிருப்பதால் அத்தொகை குறைக்கப்பட்டு மேலும் செலுத்த வேண்டிய தொகையான ரூபா. 1,025,571.80 ஐ 2012.09.18ம் திகதி செலுத்தப்பட்டுள்ளது. அவாது ஊ.சே.நிதி மிதியை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**VII. திரு JADRN அப்புஹாமி – விரிவுரையாளர்.**

இவர் 2008.10.13ம் திகதி சேவையிலிருந்து விலகியுள்ளார். அவரிடமிருந்து பல்கலைக்கழகத்திற்குக் கிடைக்க வேண்டிய தொகைகள் பின்வருமாறு

| | | |
|---|---|---|
| 1. முறிகளின் பெறுமதி | ரூ. | 1998 099.68 |
| 2. விலகும் போது அறவிடவேண்டிய | | |
| 3. மாத சம்பளம் | ரூ. | 89 475.00 |

**4. நிதிப்படுதிக்குச் செலுத்த வேண்டியவை ரூ. 74 079.88**

**மொத்தம் ரூ. 2161 564.56**

**அவரின் ஊ.சே.நிதி மீதி ரூபா. 699,781.45 ஐ அறவீடுகளுக்குச் செலுத்த விருப்பம் தெரிவிக்கப்பட்டுள்ளது. மீதியான ரூபா. 1,461,783.11 அவரால் 2012.12.11ம் திகதி பல்கலைக்கழகத்துக்குச் செலுத்தப்பட்டுள்ளது. ஊ.சே.நிதிமீதியையும் அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.**

**VIII. திரு KL. ரொட்ரிகோ – விரிவுரையாளர்**

**திரு ரொட்ரிக்கோ அவர்க்ள் 2008.04.01 இல் சேவையிலிருந்து விலக்கப்பட்டுள்ளார். ஆவரால் பல்கலைக்கழகத்திற்குச் செலுத்த வேண்டிய தொகை ரூபா. 1,069,158.87 ஆகும். அவரது ஊ.சே.நிதி மீதியான ரூபா. 926,474.46 இனால் அதனைச் செலுத்த விருப்பம் தெரிவித்துள்ளதுடன் மீதித்தொகையான ரூபா. 142,684.41 ஐ 2012.10.03ம் திகதி செலுத்தியுள்ளார். ஊ.சே.நிதி மீதியான ரூபா. 926,474.46 ஐ அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.**

ஆ). 2008ம் வருடம் விலை மனுக் கோரலின்றி தனியார் நிறுவன மொன்றிலிருந்து ரூபா. 4,130,770 பெறுமதியான நூலகப்புத்தகங்கள் கடனாகப் பெறப்பட்டுள்ளதுடன், நிதிக் கூற்றுகளில் அப்பொறுப்பு வெளிக் கொணரப்பட்டிருக்க வில்லை.

**நூலகத்திற்குப் புத்தகங்கள் கொள்வனவு செய்யும் போது “புத்தகக் கொள்வனவு தொடர்பாக தீர்மானிக்கும் குழு “Library Acquisition Committee” டென்டர் சபை இயங்கிய நடைமுறையே இருந்து வந்தது. 2003 ஜுலை 29ம் திகதி நடத்தப்பட்ட 31 வது டென்டர் சபை கூட்டத்தில் இம்முறை (இணைப்பு – 04) அனுமதிக்கப்பட்டுள்ளதுடன், 2010 இறுதிவரை இம்முறையே நடைமுறையிலிருந்தது. ஆகையால் விலைமனுக் கோரலின்றிய கடன் கொள்வனவுகள் இடம் பெறவில்லை**

**க்வென்ஸி (Quency) நிறுவனத்திலிருந்து பெறப்பட்ட புத்தகங்களுக்குச் செலுத்த வேண்டிய தொகை தொடர்பாக முகாமைத்துவ சபையின் பணிப்பில் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன் அக்குழுவின் முடிவிற்கேற்ப நடவடிக்கை எடுக்கப்படும்.**

4.3 <u>செயற்பாட்டுக் குறைபாடுகள்</u>

பல்கலைக்கழகத்தின் துப்பரவு நடவடிக்கைகலுக்கு ஒப்பந்தத்தினடிப்படையில் தினமும் 42 ஊழியர்கள் சேவைக்கமர்த்தப்பட வேண்டுமெனினும், அமர்த்தப்பட்டவர்களின் எண்ணிக்கை குறைந்த காரணத்தால் 2011 நவம்பர் மாதத்தில் 22 வேலை நாட்களில் செய்யப்படவேண்டிய 307 மனித நாட்கள் குறைவாக வேலை செய்யப்பட்டிருந்த போதும், ஒப்பந்தத்தின் படி கொடுப்பனவுகள் செய்யப்பட்டிருந்தன.

**2010.11.16 ம் திகதி CN கிறியேசன்ஸ் நிறுவனத்துடன் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் படி ஒவ்வொரு வளாகத்திலும் வேலைப்பத்திரம் தயாரிக்கப்பட்டு (BOQ) செலவுகள் மீளாய்வு செய்யப்பட்டுள்ளதுடன், ஊழியர்கள் குறையும்**

**நாட்களில் மேலதிக உபகரணங்கள், உதவியாளர்களைப் பயன்படுத்தி வேலைப்பத்திர படி எவ்வித முறைபாடுகளுமின்றி தமது வேலையை CN கிறியேசன்ஸ் செய்துள்ளது.**

**எவ்வாறெனினும், குறித்த ஊழியர் தொகை தொடர்பான மீளாய்வும், டென்டர் பெறுமதியைத் தீர்மானிப்பதற்கும், ஊழியர்களின் வருகைகேற்ப கொடுப்பனவுகள் வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.**

**அதன்படி 2013/2014 வருடங்களுக்காகத் தயாரிக்கப்பட்ட டென்டர் பத்திரத்தின் படி ஊழியர் வருகை, செய்த வேலை ஆகிய இரு பகுதிகளும் கருத்திற்கொள்ளப்பட்டு கொடுப்பனவு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.**

4.4 நிதியங்களின் குறை பயன்பாடு

பின்வருவன அவதானிக்கப்பட்டன.

அ). தகவல் தொழினுட்ப நிதியத்திற்கு 2010ம் வருடத்தில் பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழுவினால் கிடைத்த ரூபா. 1,000,000 ஆனது 2011ம் வருடத்திலும் எந்த வேலைக்கும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை

**2010ம் வருடத்தில் கிடைத்த ரூபா. 1,000,000.00 இற்கு 2011ம் வருட்தினுள் விலை மனுக்கோரல்கள் செய்யப்பட்டு 2012ம் வருட ஆரம்பத்தில் ரூபா. 812,000.00 செலுத்தப்பட்டுள்ளது.**

ஆ). 2000 இலிந்து 2010ம் வருடம் வரை மகபொல நிதியம், மாணவருதவி நிதியம் என்பவற்றில் வழங்கப்பட்டது. எஞ்சிய தொகைகளான முறையே ரூபா. 633,200, ரூபா 560,400 என்பன அவற்றின் 2011 ஜனவரி 1ம் திகதிக்கான முழு மீதியான ரூபா. 1,193,600 ஆனது மேற்கூறிய நிதியங்களில் வைப்புச் செய்யப்படாது மாணவர் நலன்புரி நிதிக்கணக்கில் வைப்பு செய்யப்பட்டு பல வருடங்களாக எவ்வித பயன்பாடுமின்றி 2011 திசம்பர் 31ம் திகதி பல்கலைக்கழக நிதியத்திற்கு கொண்டு வரப்பட்டிருந்தது.

**இங்கு கூறப்பட்ட மாணவர் நலன்புரி நிதியமானது செலுத்தப்பட்டாத மாணவருதவி, மகபொல நிதியங்களின் மீதியைக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட ஒரு நிதியமாகும். செலுத்தப்படாத மகபொல, மாணவருதவி நிதியங்களின் மீதி தொடர்பாக பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழுவில் வினவப்பட்டு, அது தொடர்பாக தீர்வு கிடைக்கப்பெற்றமையால் 52.06 நிதிக் குழுவின் தீர்வுப்படி 2011ம் வருடத்திற்கான இணக்கக் கூற்று தயாரிக்கப்பட்டதன் பின் வருமானத்திற்கு கணக்கு வைக்கப்பட்டது.**

4.5 குளியாப்பிட்டிய வளாகத்தில் 03 மாணவர் விடுதிகளைக் குத்தகைக்கு எடுக்கும் போது நிருவாகக் குழுவின் அனுமதியின் படி மதிப்பீட்டுத் தொகையிலும் மேலதிகமாக ரூபா. 421,000 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

**மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் உரிய கட்டிடங்களுக்கு பெறப்பட்ட மதிப்பீட்ப் பெறுமதிகளுக்கேற்ப விலை மனுதாரர்கள் முன்வைத்த தொகைகளைக் குறைக்க முயற்சி செய்ததுடன், கோரப்பட்ட தொகையிலும் சிறு தொகையை குறைத்துக் கொள்ள முடிந்ததுடன் மதிப்பீட்டுப் பெறுமதி வரை குறைக்க முடியவில்லை. ஆகவே நிருவாக சபையின் அனுமதிக்கேற்ப டென்டர் குழு அனுமதித்த தொகையைச் செலுத்த முடிவு செய்யப்பட்டது.**

4.6 இனங்காணப்பட்ட நட்டங்கள்

நேச்சர் பயோ டெக்னொலேஜ் (Natare BioTechnology)

எனப்படும் சஞ்சிகையொன்றைக் கொள்வனவு செய்வதற்கு 2013 – 2011 வரையான கால எல்லைக்குள் செலுத்தப்பட்ட ரூபா. 1,803,968 முற்பணத்திற்கு ரூபா. 631,413 பெறுமதியான சஞ்சிகைகளும், 2007ம் வருடத்தில் வெளிநாட்டுத் தனியார் நிறுவனமொன்றிற்கு சஞ்சிகைக் கொள்வனவிற்கு செலுத்தப்பட்ட ரூபா. 363,152 முற்பணத்திற்கு ரூபா. 135,690 பெறுமதியான சஞ்சிகைகளும் 2012 மார்ச் 31ம் திகதி வரையும் நூலகத்திற்குக் கிடைத்திருக்க வில்லை.

**Natare BioTechnology**

**Natsre Bio Technology எனும் சஞ்சிகை கொள்வனவு செய்வதற்கு 2003 – 2011 வரையான கால இடைவெளிக்குள் செலுத்தப்பட்ட முற்பணத்தின் பெறுமதி ரூபா. 1,803,968 என கணக்காய்வின் போது காட்டப்பட்டிருப்பினும் அதன் பெறுமதி ரூபா. 1,436,808 ஆகுமெனத் தெரிய வந்துள்ளது.**

**கணக்காய்வின் படி முற்பணத்திற்கேற்ப கிடைக்காத சஞ்சிகைகளின் பெறுமதி ரூபா. 631,413.00 எனக் குறிப்பிடப்பட்ட போதும் அத்தொகை ரூபா. 176,818.70 ஆகும்.**

**இத் தொகை கணக்கிடப்பட்ட முறை பின் வன்வருமாறு**

1. **2003/2004 வருடங்களில் பெறப்பட்ட முற்பணம் ரூ. 98,830.00**
   **(சஞ்சிகையின் 11 இதழ்களுக்காக 2004.07.26ம் திகதி)**
   **ஜர்னல் இல C – 076 இல் முற்பணம் செலுத்தப்பட்டிருக்கிறது.**

2. **2005/2006 வருடங்களில் பெறப்பட்ட முற்பணம் ரூ. 174,018.00**
   **(சகல சஞ்சிகைகளும் கிடைத்தமையால் 2006.09.05 இல் இன்வன்ட்ரீ இல 2753 இல் முடிக்கப்பட்டிருக்கிறது)**

3. **2006/2007 வருடங்களில் பெறப்பட்ட முற்பணம் ரூ. 214,191.00**
   **(சகல சஞ்சிகைகளும் கிடைத்தமையால் 2007.09.14 இல் இன்வன்ட்ரீ இல 3185 இல் முடிக்கப்பட்டிருக்கிறது.**

4. **2008/2009 இல் பெறப்பட்ட முற்பணம் ரூ. 303,116.00**

(ஒரு சஞ்சிகைத் தொகுதியின் பெறுமதி ரூ 25,259.66) ரூ. 126,298.30

கிடைத்துள்ள சஞ்சிகைத் தொகுதிகளின் (5) பெறுமதி

பற்றுத் தொகை ரூ. 176,818.70

5. 2009/2010 வருடத்திற்காக 2009.06.12 ரூ. 275,886.00 முற்பணம் கேட்கப்பட்டிருப்பினும் இன்னும் கிடைக்கவில்லை

அம் முற்பணம் 2010ம் வருடத்திலேயே கிடைக்கப்பெற்றுள்ளதால் 2010 செப்டம்பர் தொடக்கம் 2011 ஒகஸ்ட் வரையான தொகுதிகள் இதற்குள் அடங்கும். சகல சஞ்சிகைகலும் கிடைத்தமையால் இம்முற்பணம் 20120316 அன்று இன்வென்ட்ரி இல 6196 இனால் செலுத்தி முடிக்கப்பட்டுள்ளது. கிடைக்காத சஞ்சிகைகலைக் குறிப்பிடப்பட்ட 2009 ஜனவரி தொக்கம் டிசம்பர் வரையான தொகுதிகள் இதற்குரித்தானவையல்ல.

6. 2010/2011 வருடங்களில் பெற்ற முற்பணம் ரூ. 370,767.00
(சகல சஞ்சிகைகலும் கிடைத்துள்ளமையால் 2012.09.17
அன்று இன்வென்ட்ரி இல 7452 இல் செலுத்தி முடிக்கப்பட்டுள்ளது.

ரூ. 1,436,808.00 ரூ 176,818.70

<u>சிரேஷ்ட உதவி நூலகர் - மாகந்துர ரூ. 363,152.00</u>

மேற்கூறிய முற்பணம் **Cambridge University Press** நிறுவனத்தினால் 3 சஞ்சிகைகளுக்காகப் பெறப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| **a). British Journal of Nutrition** | **Rs. 146,834.00** |
| **b). Public Health Nutrition** | **Rs. 126,731.00** |
| **c). Proceedings of the Nutrition** | **Rs. 89,586.00** |

மேற்கூறிய 3 சஞ்சிகைகளுள் 1) சஞ்சிகைக்காகச் செலுத்தப்பட்ட ரூபா. 126,731.00 உம் தொடர்பாக சகல சஞ்சிகைத் தொகுதிகளும் கிடைக்துள்ளமையினால் அதற்கான ரூபா. 273,565.90 முற்பணத்தொகை 2011.12.13ம் திகதியை 6183ம் இலக்க இன்வென்ட்ரிப்பத்திரத்தில் கணக்கு முடிக்கப்பட்டுள்ளது.

இங்கு c) **Proceedings of the Nutrition Society** சஞ்சிகையின் 6 தொகுதிகளில் 5 கிடைத்துள்ளதுடன், அவற்றிக்கான முழு முற்பணத்தொகையின் ரூபா. 74,655.33 ஆனது 2012.12.19 ம் திகதியை 7470ம் இலக்க இன்வென்ட்ரிப் பத்திரத்தில் முடிக்கப்பட்டுள்ளது. அதன்படி ஒரு தொகையின் பெறுமதி ரூபா. 14,931.00 ஆவதுடன் அச்சஞ்சிகைத் தொகுதியை வரவழைப்பதற்கு அல்லது அதற்குப்பதிலாக இத்தொகையை வேறு சஞ்சிகைத் தொகுதியொன்றிற்கு மாற்றீடு செய்வதற்கு குறித்த நிறுவனத்திற்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன்.

4.7 கொந்தராத்துப் (ஒப்பந்த) பரிபாலனக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

அ). கால்நடை,மீனவ மற்றும் போசணை பீட வாகனத்தரிப்பீடம் நிர்மானிக்கும் ஒப்பந்தத்தின் இழிவு மனுவானது பொறியியலாளரின் மதிப்பீடான ரூபா. 857,525 இனும் 5.25% அதிகரிப்பு காணப்பட்ட போதும் அதனுள்ளடக்கப்பட்ட ரூபா. 37,000 பெறுமதியான வேலை செய்யப்பட்டிருக்கவில்லை. அத்துடன் ரூபா. 138,796 இதற்கான மேலதிக வேலை, மற்றும் கூடுதலாகச் செய்த வேலையின் பெறுமதியுடன் முறையான அனுமதியின்றி ரூபா. 993,087 கொடுப்பணவு வழங்கப்பட்டிருந்தது.

**இந்த வாகனத்தரிப்பிடம் அமைக்கும் இடம் தொடர்பாக மாகந்துர வளாகத்துடனான கருத்து முரண்பாடு காரணமாக கொந்தரத்து வழங்கப்பட்டதன் பின்னர் ஆரம்பத்தில் தீர்மானிக்கப்பட்ட இடத்தை மாற்ற நேரிட்டது. அவ்வொப்பந்தத்தை நிறைவு செய்ய BOQ வில் 1 தொடக்கம் 7 வரையான உருப்படிகளில் குறிப்பிடப்பட்டிருந்ததையும் விடக் கூடுதலான வேலைசெய்ய வேண்டி யேற்பட்டது. அக்காரனத்தால் பிரதான நிர்வாகத்திற்கு பாதகம் விழையாமல் பொறியியலாளர் மதிப்பீட்டின் 08,09,10 (ரூபா. 37000) ஆம் பிரிவுகள் செய்யாதிருக்க முடிவெடுக்கப்பட்டது. அது வேலை செய்து கொண்டிருக்கும் போது ஏற்பட்ட நடைமுறைச் சிக்கலாகும்.**

**இந்த நிர்மானம் தொடர்பான நெகிழ்வுகள் பின்வருமாறு**

| | |
|---|---|
| **BOQ இல 1-7 வரை (Excess Work)** | **ரூபா. 109,996.00** |
| **இடம் மாற்றம் காரணமாக (Extra Work)** | **ரூபா. 28,800.00** |
| | **ரூபா. 138,796.00** |
| **கழிவுகள்** | |
| **ஒப்பந்தக்காரனின் விலைமனுப்படி செய்யப்படாத வேலை** | **ரூபா. 48,534.00** |
| **தூய நெகிழ்வு** | **ரூபா. 90,262.00** |

**தூய நெகிழிவுகளின் பெறுமதி 10% எல்லைக்குள் காணப்படுவதால் உபவேந்தரின் அனுமதியில் கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது.**

ஆ) நிருவாகக் கட்டிடத்தை அலுமினியத்தினால் பாடிசண் பண்னுவதற்கான ஒப்பந்தம் இழிவு மனுதாரருக்கு ரூபா. 413,175.00 வழங்கப்பட்ட போது அவர் அதனைச் செய்யாதனால் 2ம் குறைந்த மனுதாரருக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டது. எனினும் முதல் ஒப்பந்த காரரிடமிருந்து அறவிடப்படவேண்டிய ரூபா. 41,317 அறவிடப்பட்டிருக்க வில்லை.

**2012.10.23 ம் திகதி நடைபெற்ற நிதிக் குழுவிற்கு நிதிப்பிரிவினால் சமர்பிக்கப்பட்ட UFC/Mome 60/60 வின்படி புனித மரியாள் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டிருந்த மாகந்துர Staff Quarters நிர்மானத்தினாலும் Researching Hut ஒப்பந்தத்திலும் மேலும் அவ்வொப்பந்தக்காரருக்குச் செலுத்த வேண்டியுள்ள ரூபா. 95.308.83**

**இலிருந்து மேற்கூறிய தொகை பல்கலைக்கழகத்திற்கு எவ்வித நட்டமும் ஏற்படாத வாறு அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.**

இ). உரிய வருடத்தில் மதிப்பீடு செய்யாது ரூபா. 1,756,147 பெறுமதியான நேரடி சிரம அடிப்படையில் நிர்மானம் செய்யப்பட்டிருந்தது. மதிப்பீடு செய்வதற்கு காலம் வீனாவதால் மதிப்பீடு செய்யாது நிர்மானம் செய்ததாக உபவேந்தர் அறிவித்துள்ளார்.

மிக அவசர தேவையினடிப்படையில் இந்த நிர்மானம் செய்யப்பட்டதுடன் இதன் பின்னர் பரும்படி மதிப்பீடு தயாரித்ததன் பின்னர் நிர்மானங்கள் செய்யப்படும்.

ஈ). பரீட்சிக்கப்பட்ட 5 செயற்றிட்டங்களின் ஒப்பந்தப் பெறுமானங்களின் 14% - 27% வரையான வேலைகள் கைவிடப்பட்டிருந்ததுடன், மேலதிக வேலை மற்றும் வேறுபாடுகள் 15% - 26% வரை இருந்து இதற்கு முறையான அனுமதி பெறப்பட்டிருக்கவில்லை.

**பல்வேறு காரணங்களால் வேலைப்பகுதிகள் கைவிடப்படல், புதிதாகச் சேர்துக்கொள்ளப்படல், இயல்பில் மாற்றம் செய்ய வேண்டி யேற்படல் என்பன நிர்மானத்துறையில் சாதாரன விடயங்களாகும். இது வரை எந்த நிர்மானத்திலும் மேற்கூறிய கூடிய பெறுமதி 10% இலும் கூடிய அனுமதியின்றிய கொடுப்பனவுகள் செய்யப்படவில்லை.**

உ). பல்கலைக்கழகத்திற்கு அனுமதிக்கப்பட்ட பிரதான கட்டிடத்திட்டமிடலில் உள்வாங்கப்படாத ரூபா. 2,025,962.00 பெறுமதியான பல நிர்மானங்கள் உரிய வருடத்தினுள் நிருவாகக் குழுவின் அனுமதியின்றி மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**பல்கலைக்கழகத்தில் அவ்வப் பீடங்களில் ஏற்படும் கல்வி சார், மற்றும் பொதுத் தேவைகளுக்காக அவ்வவ் வருடங்களின் புனர்நிர்மான நிதியினால் செய்யப்படும் சிறு நிர்மானங்கள் பிரதான திட்டமிடலில் உள்ளடக்கப்படுவதில்லை. ஆவை, உபவேந்தர், பதிவாளர் மற்றும் பல்கலைக்கழக டென்டர் குழு என்பவற்றின் அனுமதியுடன் புனர்நிர்மான நிதியினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. பிரதான திட்டமிடலுக்கு பாதிப்பு ஏற்படும் வகையில் எவ்வித நிர்மானமும் செய்யப்படவில்லை.**

4.8 ஊழியர் குழாம் நிர்வாகம்

4.8.1 அனுமதிக்கப்பட்ட மற்றும் தற்போதைக்கு ஊழியர் தொகை

2011 திசம்பர் 31ம் திகதிக்கு வயம்ப பல்கலைக்கழகத்தின் அனுமதிக்கப்பட்ட மற்றும் தற்போதுள்ள ஊழியர் பற்றிய விபரம் பின்வருமாறு

| வகை | அனுமதிக்கப்பட்ட | | தற்போதுள்ள | | வெற்றிடம்/மேலதிகம் | |
|---|---|---|---|---|---|---|
| | கல்வி | கல்வி சாரரா | கல்வி | கல்வி சாரா | கல்வி | கல்வி சாரா |
| நிறைவேற்று | 162 | 31 | 118 | 25 | 44 | 06 |
| இரண்டாம் நிலை | 83 | 152 | 88 | 141 | (05) | 11 |
| முதல் நிலை | - | 138 | - | 119 | - | 19 |
| வேறு | - | - | 13 | 29 | 13 | 29 |
| | 245 | 321 | 219 | 314 | 52 | 07 |

இது தொடர்பாக கீழ்வரும் அவதானிப்புகள் செய்யப்பட்டன.

அ). மாணவர்களின் கல்வியில் நேரடித்தாக்கத்தை ஏற்படுத்தும் கல்வி சார் ஊழியர் குழுவில் பேராசியர்கள், விரிவுரையாளர்கள், போன்ற பதவிகளில் 44 வெற்றிடங்கள் காணப்பட்டன.

**கல்வி சார் ஊழியர்களின் வெற்றிடங்கள் தொடர்பாக பத்திரிகைகளில் விளம்பரம் செய்யப்பட்டு வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதன்படி 2012.10.31ம் திகதியாகும் போது 19 பேர் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளனர். (இணைப்பு – 05) மேலும் மீதி வெற்றிடங்களும் விளம்பரம் மூலம் சேர்த்துக் கொள்ள நடவடிக்கை மீண்டும் எடுக்கப்பட்டுள்ளது.**

ஆ). கல்வி பிரிவில் அனுமதிக்கப்பட்ட 58 தற்காலக Demostrator மற்றும் Tutor இடைவெளிகளுக்கு மேலதிக 22 பேர் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளார்.

**கல்வி பகுதியில் நிலவும் நிரந்தர உத்தியோகத்தர்களுக்கான வெற்றிடங்களுக்களுக்குக் கிடைக்கும் நிதி ஒதுக்கீட்டுக் கேற்ப ஒவ்வொரு பகுதியினது தேவைக்கேற்ப அனுமதித்த தொகையிலும் கூடுதலாக தற்காலிக Tutor 08 பேர் மட்டும் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.**

இ). 2011ம் வெளி விரிவுரையாளர்கள் 13பேர் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளதுடன், அதற்காக ரூபா 1,202,715 சம்பளமாக வழங்கப்பட்டுள்ளது.
**கல்வி பகுதியில் கற்பிக்கப்படுகின்ற ஒவ்வொருபாடம் தொடர்பாகவும் அனுபவமுள்ள உத்தியோகத்தர்கள் இன்மையால் கல்வி நடவடிக்கைகளை வெற்றிகரமாக மேற்கொள்வதற்காக வெளிவிரிவுரையாளர்கள் 13 பேர் சேர்த்துக்கொள்ளப்பட்டனர்.**

ஈ). அனுமதித்த ஊழியர் தொகையில் சிற்றூழியர் வெற்றிடங்கள் 19 காணப்பட்ட போதும் அதற்காக ஊழியர்களைச் சோர்த்துக் கொள்ளாது வெளி சிரம சேவை வழங்கும் நிறுவனமொன்றிடமிருந்து 29 பேரைப் பெற்று ரூபா 4,766,716 வழங்கப்பட்டுள்ளது.

**2008.09.08ம் திகதிய பல்கலைக்கழக மாணிய ஆணைக்குழுவின் தலைவரது கடிதத்திற்கமைய 2009ம் வருடத்திற்கான ஊழியர்வெற்றிடங்களுக்கு அரச முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தின் அனுமதிகிடைக்கப் பெறும் வரை சுகாதார, பராமரிப்பு, மற்றும் துப்பரவு செய்தல் என்பவற்றிற்கு வெளி**

**உழைப்பாளிகளைச் சேர்துக் கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இணைப்பு – 06)**
**வளரும் பருவத்திலுள்ள பல்கலைக் கழகமொன்றாதலால் அதன் பீடங்கள், கல்விப்பகுதிகள், கல்வி அலகுகள் மற்றும் நிருவாக அலகு என்பன புதிதாக இணைக்கப்படுதல், விரிவாதல் காரணமாகத் தினமும் சிரமத் தேவைகளும் விருத்தியடைந்துள்ளன. அத்துடன் 2008ம் வருட அனுமதிக்கேற்ப இதுவரை ஊழியர்கள் சேர்த்துக் கொள்ளல் நடைபெறுவதுடன், ஒவ்வொரு பீடங்கள், கல்விப்பகுதிகள், அலகுகளால் ஊழியர் தேவை கேட்கப்பட்டிருப்பினும் அவர்களைச் சேர்த்துக் கொள்வதற்கான அனுமதி இன்னும் கிடைக்க வில்லை**

**அதன்படி முறையான டென்டர் முறையில் தனியார் சிரம வழங்கள் நிறுவனமொன்றிலிருந்து சிரமத் தேவை நிறைவேற்றப்படுவதுடன், அதனூடாக 29 ஊழியர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளனர். எனினும் பல்கலைக்கழக சிரமத்தேவை பூத்திசெய்யப்படவில்லை என்பதுடன், நிதி ஒதுக்கீடுகளிலுள்ள குறைபாடு காரணமாக பாரிய ஊழியர் தேவை இருப்பினும், 29 பேரினால் அத்தேவைகளை சமாளிக்க வேண்டியேற்பட்டுள்ளது.**

5. <u>கணக்கு நடவடிக்கைகளும் முறையான முகாமைத்துவம்</u>

5.1 <u>இணைந்த திட்டம்</u>

பல்கலைக்கழகத்தால் இங்கு கருதப்படும் வருடம் உட்பட்டவாறு இணைந்த திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருந்தது.

**பல்கலைக்கழகத்தில் 2010 – 2015 வரையான இணைந்த திட்டமிடல் ஒன்று தயாரிக்கப்பட்டிருந்தது.**

5.2 <u>நடைமுறை திட்டம்</u>

நடைமுறை திட்டத்திற்கேற்ப ரூபா 28,189,988 பெறுமதியான ஒதுக்கீட்டினால் நிர்மானிப்பதற்கு ஏற்பாடு செய்திருந்த கட்டிடமும் ரூபா 12,459,101 பெறுமதியான ஒதுக்கீட்டினால் கொள்வனவு செய்ய ஏற்பாடு செய்திருந்த நூலகப் புத்தகங்களுக்கு அமைவாக கருத்தில் கொள்ளப்படும் வருடத்தில் முறையே ரூபா. 27,079,735 மற்றும் ரூபா. 9,186,780 செலவு செய்யப்பட்டிருந்ததுடன், 2011 டிசம்பர் 31ம் திகதிக்கு முறையே அச்செலவுகளில் ரூபா 1,110,252 மற்றும் ரூபா 3,272,321 மீயாக இருந்தது.

**2011ம் வருடத்தில் புனர்நிர்மான வேலைகளுக்கென முன்கூட்டியே பட்டியல் ஒன்று தயாரிக்கப்பட்டிருந்ததுடன், உண்மையாக 2011ம் வருடத்திற்குக் கிடைத்த ஒதுக்கீட்டின் அளவுக்குள்ளான வேலைமட்டும் செய்யப்பட்டுள்ளது. அதற்கு மேலதிக நடப்பு வருடத்தில் எழும் பிரச்சினைகளுக்கேற்ப முன்னுரிமையளிக்கப்பட்டு செய்ய வேண்டிய சில வேலைகளும் செய்யப்பட்டுள்ளன.**

**ஆய்வுக்குட்படும் வருடத்தினுள் நூலகத்திற்கும் புத்தகங்கள் வளங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்ட போதும், வருடமுடிவு வரை நிதி ஒதுக்கீடு கிடைக்காமையால் திட்டமிட்டபடி செயற்பட முடியவில்லை.**

5.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு

பல்கலைக்கழகத்தினால் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழக்கள் நியமிக்கப்பட்டிருந்ததுடன், ஆய்வு வருடத்தினுள் அவற்றின் 03 கூட்டங்கள் மற்றும் நடத்தப்பட்டிருந்தன.

**உள்ளக உதவிக்கணக்காளராகக் கடமையாற்றிய அதிகாரி இடமாற்றம் பெற்று வேறு பல்கலைக்கழகமொன்றிற்குச் சென்றமையால் 2011ம் வருடத்தில் மேற்படி கூட்டங்கள் 3 மட்டுமே நடத்த முடிந்தது வேறு பல்கலைக்கழகமொன்றின் உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவர் வாரத்தில் ஒரு நாள் இப்பல்கலைக்கழகத்திற்கு வந்து உள்ளகக் கணக்காய்விற்குட்பட்ட விடயங்களுக்கான வேலைகளைச் செய்ததுடன் உள்ளகக்கணக்காய்வு வேலைத்திட்டத்தின் கீழ் வரும் பல்வேறு துறைகள் தொடர்பான உள்ளகக் கணக்காய்வு வேலைத்திட்டம் தலைமைக்கணக்காய்வாளரின் சம்மதத்தின் பேரில் நடைமுறைப்படுத்தப்படுகிறது.**

**அவ்வாறிருப்பினும், 2012ம் வருடத்திலிருந்து சுற்றுநிருபத்தின் விதந்துரைப்புக்கேற்ப காலாண்டுக் கொருதடவை கணக்காய்வு மற்றும் முடைமைத்துவக் குழு கூட்டங்கள் நடத்தப்படுகின்றன.**

5.4 <u>கொள்வனவுத் திட்டம்</u>

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

அ). பல்கலைக்கழகத்தினால் ஆய்வு வருடம், முன்னைய வருடங்களுக்கென கொள்வனவுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக புத்தக கொள்வனவிற்காக திரைசேரியால் கிடைக்கப்பெற்ற ரூபா 7.5 மில்லியனில் ரூபா 3.2 மில்லியன் அளவு பாரிய தொகை மீதியாகவிருந்தது.

**பல்கலைக்கழகத்திற்கு பொருத்தமான வயில் கொள்வனவு திட்டமிடல் தயாரிக்கப்பட்டு உயர்கல்வி அமைச்சின் செயலாளருக்கு முன் வைக்கப்பட்டுள்ளது.**

**நூலகப் புத்தகச் செலவு விடயத்தில் 2011 ம் வருடத்தில் ரூபா 3.2 மில்லியன் மீதியாவதற்கான காரணம் 5.2 பதிலில் முன்வைக்கப்பட்டுள்ளது.**

ஆ). கொள்வனவுத் திட்டமிடலுக்கமைய வருடத்தின் கொள்வனவுச் செயன் முறை நடைமுறைப்படுத்தப்படாமையாள் 03 மாதங்களுக்குள் 10 சந்தர்பங்களில் வெவ்வேறு விலைகளில் ரூபா 2,360,800 பொறுமதியான கணனிகள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

**அவ்வப் பகுதிகளில் முன்வைக்கப்பட்ட வேண்டுதல்களில் அவசரத்தேவைகளுக்கு உபவேந்தரின் அனுமதியுடன் கொள்வனவுகள் செய்யப்பட்டுள்ளன.**

5.5. <u>வரவு செலவுக் கட்டுப்பாடுகள்</u>

வரவு செலவறிக்கை தயாரிக்கையில் 25 வகையான செலவீனங்களின் மேலதிக மதிப்பீடுகள் செய்யப்பட்டிருந்ததுடன் 22 வகையான செலவீனங்களில் ஒதுக்கீடுகளை மீறிய செலவு செய்யதல், ஒருவனச் செலவீனத்தின் முழு ஒதுக்கீட்டுத் தொகையும் மீதப்படுத்தல், மாணவர் உதவிக்கு வரவு செலவறிக்கைக்குட்படுத்தாது ரூபா

25,606,250 செலவு செய்தல் என்பன செய்யப்பட்டிருந்ததுடன், வரவு செலவு அறிக்கை நிதிப்பரிபாலனக் காரணி ஒன்றாகப் பாவிக்கப்பட்டிருக்க வில்லை.

மதிப்பீடுகள் (Estimetion) முன்னைய வருட செலவுகள், அடுத்தவருட திட்டம், பல்வேறு எடுகோள்கள் என்பவற்றின் அடிப்படையிலேயே தயாரிக்கப்படுகினறன. ஆகையால் நெகிழ்வுகள் ஏற்படுவது பொதுவானதாகும். முழுப் பொருளாதார நிலைகளின் நெகிழ்வுகளும், எதிர்பார மாற்றங்களும் நெகிழ்வுக்குக் காரணியாக அமைவதுடன், அவ்வாரான நெகிழ்வுகளை குறைப்பதற்கு தொடர்ந்து வரும் காலங்களில் நடவடிக்கை எடுக்கப்படும். பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழவினால் வழங்கப்பட்டுள்ள மாதிரிக்கேற்ப வரவு செலவுகள் தயாரிக்கப்படுவதுடன், மாணவர் நிதியுதவிக்கு அதில் தளைப்புகள் உள்ளடக்கப்படவில்லை.

5.6. <u>ஆண்டறிக்கைகள் சபைமயப்படுத்தல்</u>

இல PED/2, 2003 ஜுன் 2ம் திகதி அரச முயற்சியாண்மைச் சுற்று நிருபத்தின் 6.5.3 ம் பிரிவு மற்றும் 1971 இல 38ம் நிதிச்சட்ட மூலத்தின் 114(1)ம் பிரிவுக்கேற்ப நிதி வருடம் பூர்த்தியாகி 150 நாட்களுக்குள் பாரளுமன்றத்தில் சபைமயப்படுத்தப்படவிருந்த 2010ம் வருடத்தின் ஆண்டறிக்கை 2012 செப்டம்பர் 25 திகதி வரையில் சபைமயப்படுத்தப்பட்மைக்கான சான்றுகள் இல்லை.

**உயர் கவ்வி அமைச்சின் செயலாளரது 2010.09.07ம் திகதி HE/AD/09 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் 2010 இன் ஆண்டறிக்கை குறித்தபடி கௌரவ அமைச்சின் கவணத்திற்குக் கொண்டு வரும் வகையில் ஏழு பிரதிகள் 2012.02.14 ம் திகதி அனுப்பபட்டதுடன் அது சம்பந்தமாக 2012.05.23ம் திகதி அமைச்சின் உத்தியோகத்தர்களுடன் நடந்த கலந்துறையாடலின் பின் திருத்தப்பட்ட அறிக்கை மும்மொழிகளிலும் தயாரிக்கப்பட்டு 08 பிரதிகள் 2012.09.20ம் திகதி உயர் கல்வி அமைச்சுக்கு அனுப்பப்பட்டுள்ளது. பாரளுமன்டத்தில் சபைமயப்படுத்துவதற்குத் தேவையான பிரதிகள் தற்போது எம்மாள் தயாரிக்கப்பட்டுள்ளதுடன், உயர் கல்வி அமைச்சு அதற்குத் தேவையான பிரதிகளை வழங்குமாறு எம்மை அறிவுறுத்தியுள்ளது.**

5.7. <u>சமூக மற்றும் சுற்றாடல் பொறுப்புகளை நிறைவேற்றல்</u>

சேர்த்துக் கொள்ளும் நியமத்துக்கேற்ப, பிரயோக விஞ்ஞான பிரிவில் விரிவுரையாளர் வெற்றிடத்துக்கான அடிப்படைதன்மை விஷேட பட்டம் ஆவதுடன், அப்பீடத்தினால் விஷேட பட்டம் வழங்கப்படாமை காரணமாக 2007 இலிருந்து இது வரை அப்பீடத்தில் இருந்து சாதாரன பட்டம் பெற்று வெளியேறிய 31 பேருக்கு அப்பீடத்தியோ வேறு பல்கலைக் கலகங்களிலோ வேலைவாய்ப்புச் சந்தர்ப்பம் இல்லாது போய்யுள்ளது.

**2007ம் வருடத்தில் பிரயோக விஞ்ஞான பீடத்தில் பட்டம் பெற்ற பட்டதாரிகளுக்கு குறித்த பாடநெறி 2007ம் வருடத்திற்கு 3 வருடங்களுக்கு முன்பே ஆரம்பிக்கப்பட்டது. அப்போது பிரயோக விஞ்ஞான பீடத்தின் 3 கல்வி பிரிவுகளில் (இலத்திரனியல் விஞ்ஞான பகுதி தவிர்ந்த) விஷேட பட்டம் வழங்குவதற்குத் தேவையான சிரேஷ்ட பேராசிரியர்கள் போதியளவில் இருக்காமை/குறைவு காரணமாக அப்பட்டப்பாடநெறி ஆரம்பித்தல் நடைபெறவில்லை எனக் கூறலாம்.**

ஆனாலும், 2006ம் வருடம் மே முதல் 2008ம் வருட ஆகஸ்ட் வரையான காலத்தினுள் மேற்கூறிய விஷேட பாடநெறிகளை உருவாக்குவதற்கான பாடநெறி மிள் திருத்தம் தொடர்பாக பீடச்சபைகளின் கூட்டத்தில் பிரதான விடையமாக விரிவாக ஆராயப்பட்டதுடன் பாடநெறி ஆரம்பத்தல் தொடர்பில் திணைக்களத்தை அறிவுறுத்தல் செயற்பாடு கட்டாயமாக செய்யப்படல் வேண்டுமென மேலும் சுட்டிக்கட்டலாம். (இணைப்பு – 07)

மேலும், விஷேட பட்டம் வழங்கல் தொடர்பாக அவ்வக்கல்விப் பகுதிகள் நேரடியாக செயற்பட வேண்டியிருப்பதுடன், 03 கவ்விப் பகுதிகளிலும் சிரேஷ்ட விரிவுரையாளர்கள் இன்மையால் மேற்கூறிய கால எல்லைக்குள் இக்கருமம் தாமதமாகியது எனத் தெளிவாகக் கூறுலாம்.

ஆயினும் இக்கால எல்லைக்கு முன்பிருந்தே 2007ம் வருடம்) பீடத்தினால் நான்கு வருட இணைந்த/பிரதான பட்டப்பாடநெறி (ஆறு மாதத் தொழில் பயிற்சியுடன்) வழங்கப்படுவதுடன் அதன் முக்கிய நேக்கம் கல்வி நடவடிக்கைகளுக்கு பயிலுனர் உத்தியோகத்தர்களைச் சேர்த்துக் கொள்ளலன்றி பட்டத்தைப்பெற்ற பின்னர் பயனுள்ள வகையில் எதிர்காலத் தொழில் வாய்ப்புச் சந்தர்ப்பங்களை உருவாக்கும் செயற்பாடாகும்.

மேலும், 2007 ம் வருடத்திலிருந்து இதுவரை வழங்கப்பட்ட பட்டங்கள் மேற்குறிப்பிட்ட வாறு இணைந்த/பிரதான மற்றும் பொதுப்பட்டம் (முதல் தரச்சித்தி 31சான்றிதல்கள் ) வழங்கப்பட்ட முக்கிய நோக்கம் உயர் தொழில் வாய்ப்புச் சந்தர்ப்பங்களைப் பெற்றுக் கொள்வதற்கான பின்னணியை வழங்களும், உயர் கல்விக்கான முன்னெடுப்புகளை வழங்கலுமாகும்.

மேலும் விஷேட பட்டம் வழங்கப்பட்ட போதும் சகல முதல் தரச்சித்தி பெற்ற பட்டதாரிகளுக்கும் பீடத்தினால் தொழில் வழங்குதலை எதிர்பார்க்க முடியாததுடன் பயிலுனர் விரிவுரையாளர்களுக்கான விண்ணப்பம் கோரும் போது பிரயோக விஞ்ஞான பீடத்தின் பட்டதாரிகள் மட்டுமென்றி வேறு பல்கலைக்கழக விண்ணப்பதாரிகளுக்கும் விண்ணப்பிக்க இடமிருக்கிறது.

அதன் படி மொத்தத்தில் விஷேடப்பட்டபாடநெறிகளை உருவாக்கலின் அடிப்படை அபிலாசை யாதெனில் அவர்களுக்கு தொழில் பெறும் சந்தர்ப்பங்களை விரிவாக்கலும் உயர்கல்விக்கான வாய்ப்பை விரிவாக்கலுமாகும். அதன் படி 2011ம் வருடமாகும் போது பிரயோக விஞ்ஞான பீடத்தில் பட்டம் பெற்ற பட்டதாரிகளின் கட்டாய தொழில் சதவீதம் 90% ஐத்தாண்டிய மட்டத்தில் இருக்கிறது.

மேலும், தற்போது விரிவான பாடத்திட்ட மறுசீரமைப்பு செய்யப்பட்டுள்ளதுடன், 03 கல்வி பகுதிகளால் விஷேடபட்டம் வழங்குவதற்கான ஆதரிப்புகள் பல்கலைக்கழகத்தால் கிடைத்த பின்னர் பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழுவின் அனுமதிக்காக முன்வைக்கப்பட்டுள்ளதுடன், அதன்படி 2011/2012 கல்வியாண்டுகளில் சேர்த்துக் கொள்ளப்படும் மாணவர்களுக்கு மேற்கூறிய விஷேட பட்டம் வழங்குவதற்கான ஆயத்தங்கள் செய்யப்பட்டுள்ளன.

6. தொகுதிகளும், பரிபாலமும்

தொகுதிகளும் பரிபாலமும் தொடர்பான கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் உபவேந்தரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது. தொகுதிகளும் பரிபாலனமும் புலத்தில் பின்வரும் விடயங்களில் விஷேட அவதானம் செலுத்த வேண்டும்.

அ). நூலகப் புத்தகக் கொள்வனவு
ஆ). நிர்மான ஒப்பந்தங்கள்
இ). முற்பணம் வழங்களும் அவற்றின் முடிவும்
ஈ). வெளிவாரிப் பாடநெறிகள்
உ). தொகைக் கட்டுப்பாடு
ஊ). உத்தியோகத்தர் குழு
எ). வரவு செலவுகள்
ஏ). கொள்வனவு

**கணக்காய்வு விதப்புரையில் குறித்துக்காட்டப்பட்ட பலவீனமான புலங்களில் காணப்படும் குறைபாடுகளை இழிவாக்கிக் கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென தயவாய் அறிவிக்கின்றேன்.**

ஓப்பம்

பேராசிரியர் S.J.B.A ஜயசேகர
உபவேந்தர்